# எங்கள் முற்றம்

ரூபா 20/-

கலை இலக்கிய சமூக இதழ்

மார்ச் - ஏப்ரல் 2021

இதழ் 3



# பிறின்சஸ்

## தோல் பொருள் உற்பத்தி



0772684328

மூர்த்தி வளவு தெல்லிப்பளை, செல்வபுரம்.




**மொத்தமாகவும் சில்லறையாகவும்**
**விரும்பிய வடிவில்**
**விரும்பிய வண்ணங்களில்**
**செய்து கொடுக்கப்படும்**

நம்பமுடியாத விலைக்கழிவுடன் மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம்





**தோய்த்துத் துவைப்பதற்கே இத்தனை செலவா?**

கவலையை விடுங்கள் அழுக்கு நீங்கவும்
வாசனை தரவும் குறைந்த செலவில்
நிறைவான சலவைக் கரைசல்

**உடைகளின் நீடித்த பாவனைக்கு உத்தரவாதம்**

# எங்கள் முற்றம்

Engal Muttam

ISSN : 2783-8889

இதழ் 3 மார்ச்–ஏப்ரல் 2021


## மாதம் ஒரு குறள்

அறத்துப் பால்- அதிகாரம்:வாய்மை குறள் 263

தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்ன்ஞ்சே தன்னைச் சுடும்


ஆசிரியர் : அழ. பகீரதன்



ஆக்கங்களிற்கு பொறுப்பு எழுதிய எழுத்தாளர்களே. கதைகளில் வரும் சம்பவங்கள், பாத்திரங்கள் யாவும் எழுத்தாளரின் கற்பனையே. ஆக்கங்களை சுருக்கவும் மாற்றவும் ஆசிரியருக்கு உரித்துண்டு. ஆக்கங்களின் கருத்துகள், இதழில் வரும் விளம்பரங்களின் கருத்துகள் எவற்றுக்கும் இதன் வெளியீட்டாளரான ‘மறுமலர்ச்சி மன்றம் நம்பிக்கை’ பொறுப்பாகாது.



***வடிவமைப்பு:***
எஸ். ரி. அனுஜன் | சிவ. பரதன்

***விளம்பர சேகரிப்பு:***
புத்தகப் பண்பாட்டுப் பேரவைக்காக
அருந்தவராசா ஹிரித்யா | கு. ஸாரங்கன்

***விநியோகம்:***
சசீலன், கனிஸ்ரன், பகிதரன், நிவேந்தனா

***வெளியீடு:***
மறுமலர்ச்சி மன்றம் நம்பிக்கை
*Marumalarchchi Mantram Trust*
காலையடி, பண்டத்தரிப்பு, இலங்கை
*Kalaiyady, Pandatheruppu*


நாம் ‘எங்கள் முற்றம்’ இதழினை மாதந் தோறும் வெளியிடும் அரியமுயற்சியில் உங்களுடன் பேசுகின்றோம்.

எங்கள் முற்றம் மூன்றாவது இதழ் வெளிவருவது மனநிறைவு தருகின்றது. காலம் கடந்து வருகின்றது. நாம் இதழை மாத இதழாகவே வெளிக்கொணரத் திடசங்கற்பம் பூண்டுள்ளோம். இந்த இதழை இருபது ரூபாயில் தொடர்ந்து உங்களுக்குத் தருவதற்காக உதவி செய்யும் அனைத்து அனுசரணையாளர்களுக்கும் விநியோகத்தில் ஈடுபடும் இளைஞர்கள் யுவதிகளுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கொரோனா பெருந்தொற்றுக்குப் பின் புதிய வழமைகளுடன் பயணிக்கவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

வாசகர்கள் அனைவருக்கும் சித்திரைத் திருநாள் வாழ்த்துகள்

ஆக்கங்களைக் காலதாமதம் ஏற்படுத்தாமல் அனுப்பி வைக்கவும்

தொடர்ந்து எழுதுங்கள். விமர்சியுங்கள்.


முகவரி :
ஆசிரியர்,
எங்கள் முற்றம்,
மறுமலர்ச்சி மன்றம்,
காலையடி, பண்டத்தரிப்பு.

*marumalarchy1972@gmail.com*

*T.P +94 771041945*





# ‘யாழ்ப்பாணக் கவிராயர்’ க.பசுபதியின் ‘புது உலகம்’ நோக்கி...



அழ. பகீரதன்

தமிழ், சிங்களம், முஸ்லீம் என வேற்றுமைகள் மேவாத காலம் ஒன்று இலங்கைத் தொழிலாளர் வர்க்கத்தின் வரலாற்றில் இருந்தது. அந்தக் காலம் சொற்ப காலமே ஆயினும் ஆரோக்கியமான இலக்கிய வீச்சுப் பெற்ற காலமாக இலங்கியது. முற்போக்கு அணியினர் மண்வாசனை இலக்கியத்தை முன்னுக்குக் கொணர்ந்த காலம்.

அந்தக் காலகட்டத்தில் வாழ்ந்த கவிஞர் தான் யாழ்ப்பாணக் கவிராயர் எனும் புனைபெயரில் எழுதிய க. பசுபதி (1925—1965) எனும் தமிழ்க் கவிஞன்.

இவர் யாத்த கவிதைகள் 1965 இல் ‘புது உலகம்’ எனும் தொகுப்பாக வந்த போது அந்நூல்பற்றிய முகப்புக் கவிதையில் சில்லையூர் செல்வராசன்

சிந்தையால், வாக்கால், செம்மைச்
செய்கையாற் புரட்சி உய்க்க,
செந்தமிழ் செங் கொடிக்குச்
சேவகம் செய்ய வைக்க
வந்த மா மனித னான
பசுபதிக் கவிஞன், காயம்
வெந்தழல் உண்டும் வாழும்
வித்தகன் உயிர் இப் பா நூல்!

எனக் குறிப்பிடுகிறார்.

உயர்வுதாழ்விலா புது உலகம் காணவிழைந்த கவிதையில் எழுதுவார்:

காதல்செயும் உரிமையுண்டு: காமமென்ப தில்லை
கற்புநெறி பொதுவாகும்! பேதமது தொல்லை,
சாதிமதம் காதல்தனைக் கெடுதலெதும் செய்யா,
சாடுகின்ற சளக்கரினக் கூட்ட மில்லா யாதல்!
தீதிழைக்கும் திருமணங்கள், தெய்வத்தின் பேரால்
தீட்டிழைக்கும் தீயவர்கள் தீர்ந்தொழிந்து போனார்!
வேதியர்தாம் ஓதமணம் முடிப்பதென்ப தில்லை:
விழைகின்ற இன்பத்தில் தடையெதுவு மில்லை’

ஆம் இன்றும் இந்தப் புது உலகத்திற்காக இளைஞர்கள் கனவு காணும் நிலையிலேயே இருக்கின்றனர். அந்தப் புது உலகத்தினை எப்போது தான் சமைப்போம் என்ற எதிர்பார்ப்பே விஞ்சி இருக்கிறது.

அவர் கனவு கண்ட அந்த புது உலகத்தில்,

எல்லார்க்கும் எல்லாமென் றிருக்கின்ற தங்கே:
இன்பபுரி இந்நாடு பொன்னாடு ஆச்சே!
உல்லாச வாழ்வுண்டு உலுத்தர்சுகம் இல்லை
உலகமது புதுவுலகு உயிர்த்துடிப்புக் காணீர்

என மேலும் விரித்துக் காட்டுவார்.

காலம் எம்மை இனவாதச் சேற்றுள் வீழ்த்தி அந்த புது உலகம் காணா நிலைக்காளாக்கிற்று.

இதற்கெல்லாம் காரணம் எதுவாக இருக்கும். தமிழராகிய நாம் நாட்டுப் பற்றின்றித் தொப்புள் கொடி நாடெனக் கொண்டாடியதாலோ?

‘நாடும் ஏடும்’ எனும் கவிதையில் எம்நிலைபற்றி வெம்புவார் கவிஞர்:

எந்தாயாம் எழிலான ஈழ நாட்டில்
இருக்கின்ற என்சகத்துத் தமிழர் சில்லோர்,
எந்தாயின் அணைப்பினிலே இனிமை பெற்றும்
எந்நாடு இந்தியாநா டென்று சொல்வார்:
எந்தாய்தான் இவர்கட்கு இழைத்த அநீதி
எதுவென்று கேட்டாலோ- சொல்ல இல்லை!
தன்தாயை தான்கொண்ட தாரம் தன்னை
தன்முன்னே உரிமைகொள உடன்பட் டாரோ?

‘வையகம் பணிந்தது’ எனும் கவிதையில்

புதியதோர் உலகம் காணப்
புறப்படு புரட்சி நோக்கி

எனத்தொடங்கி,


இனத்தினால் மதத்தி னாலே
இரண்டுபட் டென்றும் வாழோம்!
சனத்தினால் நாங்கள் ஒன்று
சச்சர விதனால் ஏனோ?
தனத்தினால் வேறு காணும்
தரித்திரம் ஒழிந்து போக
மனத்தினால் மகிழ்ச்சி பூக்கும்
மணங்கமழ் வாழ்வு என்றார்!

தீண்டாமைக் கெதிராகக் குரல் கொடுத்துப் போராடிய அவர் ‘மூடி மறைக்காதீர்’ எனும் கவிதையில் மேட்டுக்குடியினரைச் சாடுகிறார்.

வான்பார்த்த பூமி வளமாக்கித் தந்தவரும்
கான்பார்த்த சாக்கடையில் காகத் துடிப்பதுவோ?
நீர்தமிழை விட்டு நிலைபிரிந்த காலத்தும்
சீருடை தானணிந்து சீமை மொழிபேசி,
ஆரோ கணித்துநீ ராங்கிலேய ராயிருந்து
பேரான வாழ்க்கை பெரிதுவந்த நாளதிலும்
நாம்பேசி வாழ்ந்திருந்தோம் நம்தமிழ்த் தாய்மொழியை
ஆம்!இதனை அட்டியின்றி ஏற்பீரோ இந்நாளில்
தீந்தமிழைப் பேசித் தேவை வரைகாத்த
இந்தத் தமிழருக்கா இத்தொல்லை செய்கின்றீர்!

என அந்நிய (மொழிபேசிய) தமிழர் தம்மொழி பேசிய தமிழரை அடக்கி ஆண்ட நிலையினைக் காட்டுகிறார்.

எமது நாட்டில் இனப் பூசலை ஊதி ஊதிப் பெருப்பித்தவர் யார் என ஓராது இன்றும் நவ காலனித்துவமாய் வியாபித்திருக்கின்ற அந்நாடுகளையே அவாவி அழைக்கின்ற போக்கில் கிஞ்சித்தும் மாற்றமின்றி தொடர்கின்றபோது கவிஞர் பசுபதி கண்ட ‘புது உலகம்’ நோக்கி வீறுநடை போடுவது எங்கனம்?



‘மூடி மறைக்காதீர்:
முன்னேற்றம் காணோமே!
பாடிக் கிறுக்காதீர்: பாதை
தவறாதீர்!
வேடிக்கை இல்லை
விரும்பு!

கவிஞர் க. பசுபதி கண்ட ‘புது உலக’ கனவை நோக்கி வீறு நடை போட நாம் முற்போக்குத் தேசியம் காண விழையோமோ?

மாணவர் ஆக்கம்:

# புத்திசாலி இளவரசி

ஒரு நாட்டின் அரசனும், அரசியும் வாழ்ந்து வந்தனர். அந்தத் தம்பதிக்குப் பிள்ளை இல்லாக்குறை. எத்தனையோ ஆண்டுகளுக்குப் பிறகு அந்தத் தம்பதிகளுக்கு ஒரு பெண் குழந்தை அந்த நாட்டிற்கு இளவரசியாகப் பிறந்தாள். அவள் தனது நண்பர்களோடு விளையாடி வந்தாள். ஒருநாள் போது இரண்டு மந்திரவாதிகள் உரையாடிக் கொண்டு இருக்கும் போது இளவரசி விளையாடிக் கொண்டிருந்தாள். அந்த இரண்டு மந்திரவாதிகளும் இளவரசியுடைய நாட்டைக் கைப்பற்றுவதற்கு யோசித்துக் கொண்டிருந்தனர். அதை அந்த இளவரசி ஒட்டுக் கேட்டார். அதைத் தன் அப்பாவிடம் கூறச் சென்றாள். அங்கே இளவரசி சென்றவுடன் இளவரசியுடைய தந்தை அங்கே அமைச்சரிடம் இளவரசியுடைய திருமணத்தைப் பற்றி உரையாடினார்.அது இளவரசிக்கும் கேட்டது.

இளவரசி மந்திரவாதிகள் உரையாடியதைக் கூற முயன்றாள். இளவரசியுடைய தந்தை அதைக்கேட்க மறுத்தார். தந்தை இளவரசியிடன், “உன்னை நாளை பக்கத்து நாட்டு அரசனின் மகனான இளவரசர் பார்க்க வருகிறார். அதனால் நீ நாளை விளையாடச் செல்லாதே” என்று கூறினார். அதைக் கேட்ட இளவரசி ஒத்துக்கொண்டாள்.

நாளை காலை விடிந்தது. இளவரசன் தனது தங்கத்தேரில் இறங்கி வந்தார். அதைக் கண்ட இளவரசி மிகவும் கோபம் அடைந்தார். விருப்பமில்லாமல் அவரை அழைத்துச் சென்றாள். விருப்பமில்லாமலே இளவரசனோடு உரையாடிளாள். அதற்குப் பிறகு அந்த இளவரசன் தனது தங்கத் தேரில் அமர்ந்து அரண்மனையை விட்டுக் கோபமாகச் சென்றான்.

அதைக் கண்ட இளவரசியுடைய தந்தை இளவரசியின் அரண்மனையில் உள்ள பெரிய கோபுரத்தில் சிறை வைத்தார்.



இளவரசியுடைய ஒரு நண்பி அந்த வழியால் சென்றாள். அந்த இளவரசி தன் நண்பியை அழைத்தாள். அந்தக் குரலைக் கேட்ட உடனே இளவரசியுடைய நண்பி குரல் வந்த திசையை நோக்கிச் சென்றாள். இளவரசி அந்தக் கோபுரத்தில் இருப்பதைக் கண்ட நண்பி ஆச்சரியம் அடைந்தாள். பிறகு இளவரசியுடைய நண்பி பொறுமையாக “ இளவரசி கோபுரத்தின் மேல் ஏன் இருக்கிறாய். என்ன நடந்தது” என்று கேட்டாள்.

இளவரசி அரண்மனையில் நடந்தவற்றைக் கூறினாள். அது மட்டுமல்லாமல் இரண்டு மந்திர வாதிகள் உரையாடியதையும் தனது நண்பியிடம் கூறினாள். அதன் பின் இளவரசி தன் நண்பியிடம் மற்ற நண்பிகளையும் அழைத்து வருமாறு கூறினாள். அதைக்கேட்ட நண்பி அழைத்து வருவதற்குச் சென்றாள். அதன் பின் அனைத்து நண்பிளகும் அந்தக் கோபுரத்திற்கு வந்தனர். அதன் பின் இளவரசி தன் நண்பிகளுக்குத் தேவையான பொருட்களைக் கூறினாள். வண்டு, தையல் நூல், அளவான கயிறு, தேன், பலம் வாய்ந்த நூல் ஆகியன எடுத்து வருமாறு கூறிளாள். அந்த நண்பிகள் இளவரசி கூறிய பொருட்களை எடுத்து

வந்தனர். அந்த இளவரசி கூறிய படி செய்தனர். வண்டைக் கையில் எடுத்தனர். வண்டின் கொம்பில் தையல் நூலைக் கட்டினர். அதன் பின் அளவான நூலை அந்தத் தையல் நூலில் கடைசிப் பக்கத்தில் கயிறைக் கட்டிவிட்டனர். அந்த அளவான நூலின் பக்கத்தில் பலமான நூலைக் கட்டிவிட்டனர். அந்த வண்டு முன்நோக்கிச் சென்றது. அந்த வண்டு கோபுரத்தை நோக்கிச் சென்றது. இளவரசியிடம் அந்த வண்டு வந்தது. இளவரசி அந்தப் பலமான நூலைப் பிடித்துக் கவனமாக இறங்கினார்.

இளவரசி அதன் பின் இரண்டு மந்திரவாதிகளையும் தேடி வேகமாக ஓடிச் சென்றாள். அதன் பின் மெதுவாக மந்திரவாதிகளின் மந்திரக் கோலையும் இளவரசி நாட்டிற்கு தெளிக்கவென்று வைத்திருந்த நீரையும் எடுத்தாள். பின்பு இளவரசியுடைய நீளமான கயிறுகளை எடுத்து வந்தனர். மந்திர வாதிகளை பெரிய மரத்தில் கட்டி வைத்தனர். இந்தச் சத்தத்தைக் கேட்ட ராஜாவும் ராணியும் காவலாளிகளுடன் சென்று பார்த்தனர். அங்கே தம் மகள் மூன்று பெண்களோடு இருப்பதைக் கண்டனர். என்ன விடயம் என்று அரசனும், அரசியும் கேட்டார்கள். அதன்பின் இளவரசி நடந்ததைக் கூறினாள். அதைக்கேட்ட அரசன், “ ஏன் என்னிடம் இந்த விடயத்தைக் கூறவில்லை” என்று கேட்டார்.

“அப்பா, நீங்கள் என்னை இந்த விடயத்தைக் கூற விடவில்லை” என்று இளவரசி கூறினாள். அதன்பின் அரசன் தன்தவறை உணர்ந்து தலை குனிந்தார். அதன் பின் ராஜாவும் ராணியும் இளவரசிக்கும் மூன்று பெண்களுக்கும் பாராட்டுத் தெரிவித்தனர்.

**சிவகரன் லித்தஹி**
தரம் 4
யா/ மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை



# இரு சஞ்சிகைகளுடன் மானிப்பாய் நகர் உலா...

தெல்லியூர் மைந்தன்

புத்தகங்களை மக்களுக்கு அறிமுகம் செய்வதும், அவற்றினை அவர்களுக்கு வழங்குவதும் மகிழ்ச்சியும் இனிமையும் நிறைந்த ஓர் செயற்பாடாகும். இச் செயற்பாட்டின் மூலம் மக்களிடம் இயல்பாக உள்ள வாசிப்புப் பழக்கத்தை ஊக்கப்படுத்தி அவர்களின் அறிவுப்புலத்தில் ஓர் தூண்டலை ஏற்படுத்துவதன்மூலம் அறிவார்ந்த சமுதாயத்தை உருவாக்கமுடியும். தற்காலத்தில் மக்களுக்குப் பிடித்த பல விடயங்களையும் உள்ளடக்கி ஒரு நிறைவான இலக்கிய சஞ்சிகையை அல்லது ஓர் சிறுவர் சஞ்சிகையை அனைத்து மக்களுக்கும் போய்ச்சேரக்கூடிய வகையில் குறைந்த விலையில் வழங்கினால் அவர்கள் ஆர்வமுடன் அவற்றை வாங்கி வாசிக்கும் நிலை உருவாகும். மேற்கூறப்பட்ட அனைத்து விடயங்களையும் நிவர்த்தி செய்யக்கூடிய வகையில் யாழ் குடாநாட்டிலிருந்து இரு சஞ்சிகைகள் வெளிவருகின்றன. ஒன்று 'அறிந்திரன்' சிறுவர் சஞ்சிகை, மற்றையது 'எங்கள் முற்றம்' எனும் இலக்கிய சமூக இதழ்.

இவ்விரு சஞ்சிகைகளையும் மக்களுக்கு அறிமுகம் செய்து வழங்கும் பொருட்டு எமது புத்தகப் பண்பாட்டுப் பேரவையினூடாக ஒருமுறை மானிப்பாய்க்கு ஓர் பயணத்தினை மேற்கொண்டு சென்றிருந்தோம். மானிப்பாய் நகரத்தில் யாழ்ப்பாணம்— காரைநகர் வீதியின் இருமருங்கிலும் அமைந்திருக்கும் சகல கடைகள், நிறுவனங்கள் மற்றும் வீதியால் சென்றுவரும் மக்கள் ஆகியோருக்கு சஞ்சிகைகளை வழங்குவதே எமது முக்கிய நோக்கமாயிருந்தது. இச்செயற்பாட்டின் போது பல விடயங்களையும் எம்மால் அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. மக்கள் பலர் ஆர்வமுடன் இவ்விரு சஞ்சிகைகளையும் வாங்கினர். இச்செயற்பாட்டில் மானிப்பாய் பிரதேச சபையினரின் செயற்பாடு எமக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கும் வகையில் அமைந்திருந்தது. அவர்கள் எமக்கு உடனடியாக இச்சஞ்சிகைகளை விநியோகிப்பதற்கான அனுமதியைத் தந்திருந்தனர். பிரதேச சபை உத்தியோகத்தர்களும் ஆர்வமுடன் இச்சஞ்சிகைகளை வாங்கிக் கொண்டனர். காலையில் இருந்து மதியம் தாண்டி மாலை வரை இச்சஞ்சிகை விநியோகத்தில் ஈடுபட்டோம்.

இச்சஞ்சிகைகள் தொடர்பாக மக்கள் பல கருத்துக்களையும் கூறியிருந்தனர். இதன்மூலம் தற்கால சமூகத்தின் புத்தகப்பண்பாடு, வாசிப்புப்பழக்கம் தொடர்பாகப் பல விடயங்களையும் அறியக் கூடியதாக இருந்தது. பலர் எமக்கு ஊக்கமளிக்கக்கூடிய வகையில் கருத்துகளைக் கூறினர் இச்சஞ்சிகைகளை எவ்வாறு உங்களால் குறைந்த விலையில் வழங்கமுடிகிறது? இதன் உள்ளடக்கமும், விடயதானங்களும் நன்றாக உள்ளன. இச்சஞ்சிகையின் அடுத்தடுத்த பிரதிகளை எவ்வாறு நாம் பெற முடியும்? இதற்கு எங்களால் இயன்ற பங்களிப்பை எவ்வாறு வழங்குவது? எனப்பலர் ஆர்வமுடன் கேட்டனர். பலர் சஞ்சிகைகளின் பல பிரதிகளைக் கேட்டுப் பெற்றுக்கொண்டனர். வாசிக்கநேரமில்லை. வீட்டு அலுவல்கள், பிள்ளைகளின் அலுவல்களைக் கவனிக்கவே நேரம் சரி. இதை வாசிக்க எங்கே நேரம்?போன்ற கருத்துக்களும் சிலரால் கூறப்பட்டிருந்தன. இது தற்கால சூழ்நிலையினை எமக்கு உணர்த்தியிருந்ததுடன் எதிர்காலத்தில் வாசிப்புப் பழக்கத்தினை மக்களிடையே எவ்வாறு வளர்த்தெடுக்கலாம் எனத் திட்டமிட்டு செயற்படுத்தவும் உதவியாக அமையும்.

மொத்தத்தில் 19ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பபாணத்தின் கல்வி வளர்ச்சியிலும், மருத்துவத்துறையின் வளர்ச்சியிலும் மானிப்பாய் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது போன்று தற்போதைய எமது மானிப்பாய் நகர் உலாவும் யாழ்குடா நாட்டில் புத்தகப் பண்பாட்டை வளர்த்தெடுப்பதற்கும், வளப்படுத்துவதற்குமான களச் செயற்பாட்டின் ஆரம்பபுள்ளியாக அமைந்ததெனலாம்.

Sajeelanf82@gmail.com

# அந்நியங்களின் அடிமைகள்!

பேரி வேந்தன்

காலனித்துவ கறையான்களால்
அரிக்கப்பட்ட அடிமைகள்
கிலிகளின் கீச்சான் குருவிகள்
மலிவுகளின் ஆச்சரியங்கள்
வலிகளின் மலர் வளையங்கள்
கறிக்கென வளர்க்கப்பட்ட ஆடுகள்!

'யாதும் ஊரே யாவரும் கேளிர்'
என்று முழங்கியே
நாடற்றவர் என்ற
முகவரியை
அறிவுக்கு எட்டாமலே
தலையில் சுமக்கும்
தூக்குத் தூக்கிகள்!

மொழி முதல் தம்மை இழந்து
வழி மாறிய பயணங்களில்
இருப்பைத் தொலைத்து
இருள் உண்ட வாழ்வதனை
உணரா மந்தைகள்!

கலையென்பார் பண்பாட்டின்
பெட்டகம் என்பர்
அந்நிய மொழிக்
கலப்பின்றி
கலையும் இல்லை
காட்சியும் இல்லை

நிலைகெட்ட மாந்தராய்
அந்நியங்களின்
அடிமைகளானோம்!







கலாலக்ஷ்மி தேவராஜாவின் இரண்டாவது ஆண்டு நினைவாக அவரது சிறுகதைகளின் தொகுப்பாக கலாலக்ஷ்மி கதைகள் எனும் நூல் கலாலயம் பதிப்பக வெளியீடாக வந்துள்ளது. செம்மனச்செல்வி எனும் புனைபெயரில் ஏலவே வெளிவந்த மகரகாவியம், ரோஜாப்பூ, பூமராங் நூல்களில் வந்த கதைகளும் வெளிவராத கதைகளும் சில குறிப்புகளும் இந்நூலில் உள்ளடங்கியுள்ளன.
அத்துடன் 'கலாலக்ஷ்மி எனும் ஆளுமை' எனும் அவரது நினைவுக் கட்டுரைகளும் இன்னும் பல கட்டுரைகளும் அடங்கியதாக வெளிவந்துள்ளது.
இரு நூல்களும் வெளியீடு : கலாலயம் பதிப்பகம், இல. 62, நீதிமன்ற வீதி, மல்லாகம்



# பெண்கள் உளவியல் ரீதியாக எதிர்கொள்ளும் சவால்கள்

கே. எஸ். சிவஞானராஜா

பொதுவாக, உலகில் 720 கோடியை எட்டிப் பிடித்த சனத்தொகையில் 300 கோடி பெண்கள் நாளாந்தம் உளவியல் ரீதியாகவும் உடல் ரீதியாகவும் அதற்கப்பால் உணவு உறையுள் உழைப்பு என்பவற்றுடனும் போராட வேண்டியவர்களாகச் சமத்துவ வாதிகளினால் கணிக்கப்பட்டுச் சனநாயக அரசுகளின் வரங்களுக்காகத் தவமிருக்கிறார்கள்- என்பதை அனைத்துல பெண்கள் அமைப்பினர் ஊடகம் வாயிலாகக் கோடிட்டுக் காட்டியுள்ளனர்.

ஒவ்வொரு ஆண்டும் பெண்கள் தினம் வரும்போதும், மார்ச் மாதம் முழுவதுமாக உலகம் விழிப்படைகிறது. களைப்படைகிறது. களையிழந்து விடுகிறது. படிப்படியாகக் கவனம் குறைகிறது. பெண்களுக்கான சவால்கள் சீர் செய்யப்படாமலே சமாளிக்கப்படுகிறதா என்ற வினா தோற்கப்படாமலே வெல்லப்படுகின்றது. ஆம்! அடுக்களையில் ஆயுள் பூராகவும் அடங்கி ஒடுங்கி நடுங்கி பொசுங்கிய பெண்கள், பிள்ளைகளை ஈன்றெடுக்கும் பிராணிகளாகவே சமூக நிலையில் கணிக்கப்பட்ட நிலையிலிருந்து, பேனாமுனை பல வாசல்களுக்குத் திறப்புவிழா செய்வித்தது. வாசல்கள் திறக்கப்பட்டதேயொழிய தோஷங்கள் ஒழியவே இல்லை. தோஷங்கள் என்பது இங்கு சவால்களையே சுட்டுகின்றது. அவை எத்தகையது? பார்ப்போமே.

பெண்களின் உளப்பாங்கிலும், உடல்பாங்கிலும் பிரம்மன் சுவர்க்கத்தையே படைத்து விட்டிருக்கின்றான். பெண்களின் அந்த இரகசியங்கள் சவாலாகின்றன. முதலாவதாக, பெண்களின் அகம்!

## உளப்பாங்கு

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதன் தாற்பரியத்திற்குப் பாத்திரமானவர்கள் பெண்களேயாவர். இந்த அழகினை நுகர்வதற்காய் ஆணாதிக்கப் பேர்வழிகள் (எல்லோரும் அல்ல, நீங்களும் அல்ல) நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கொள்ளையடிக்கத் தவம் கிடக்கின்றனர். அப்படி என்னதான் அதில் உண்டு என்று எவரும் கேட்கலாம். ஆம் அதில் ஆறுதல் உண்டு. ஆற அமர இருக்கும் நிழல் உண்டு. நீதி உண்டு, நிம்மதி உண்டு. நியாயமுரைக்கும் சந்நிதானம் உண்டு. சாந்தியும் உண்டு. சமாதானமும் உண்டு. இதன்பேறாகவே பெண்களின் உளப்பாங்கினை, ஆண்கள் தங்களின் எல்லைகளையும் வேலிகளையும் தாண்டித் தம்வசப்படுத்தவும் தாம் வாசம் செய்யவும் முனைந்து விடுகிறார்கள்.

எல்லாம் வல்ல இறைவன் ஆன்மாக்களின் இதயங்களைக் கொள்ளையடிப்பதனால், பெண்களையே பெருமைப்படுத்திய மணிவாசகப் பெருமான் இறைவனை உள்ளங்கவர் கள்வன் என்று விதந்து பாடுவது போல, நாம் வாழும் சமூகமானது, (இக்கருத்தில் எல்லோரும் அடங்கிவிடுதல் ஆகாது. நீங்களும் இல்லை) எண்பத்தைந்து சதவீதமான பெண்களின் இதயங்களைக் கொள்ளையடித்தவர்களாகவே வாழ்கின்றார்கள். இது உளவியல் ரீதியாகப் பெண்களை வாட்டி வதைக்கும் செயற்பாடாகும். எத்தனை எத்தனை கண்கள் ஊடுருவிப்பாய்ந்து கனதியான தாக்கத்தையும் ஏக்கத்தையும் பெண்களின் உள்ளத்தில் பேசாத மௌனமொழியாகப் பதிவு செய்யப்படுகிறது. பெண்களுக்கு இது பெரியதொரு அகப்புறச் சவாலாக உலகம் உள்ளவரை இடம்பெறப்போகிறது. ஆனால் ஒன்று மட்டும் உண்மை. பெண்கள் அகம் சார்ந்த நிலையில் எச்சரிக்கையோடு இருப்பதனாலேயே உலகம் ஓரளவாவது தம்மைத் தெய்வீகமாக வைத்திருக்கிறது. தெய்வங்களைச் சாட்டி பெண்களின் தன்னியத்தை அடகுவைப்பதும், ஆட்கொள்வதும் அபகரிப்பதும் வழக்கமாகி ஒதுக்கப்பட்ட இடங்களில் வலு கச்சிதமாகி அரங்கேறுகிறது. இதற்கு முன்னோடியாக உளம் அதிசயமாக்கப்படுகிறது.

இது ஒரு புறமிருக்க, அளவுக்கதிகமாக, ஆண்பாலாரும் பெண்பாலாரும் உச்சமான நாகரீக உடை நடை பாவனையை அண்மிப்பதனால் வீதியில் கவரப்படுகிறார்கள். விசுவாசமான

> **சத்திர சிகிச்சை பிரமாதம். ஆனால் நோயாளி இறந்துவிட்டார். இதுதான் பெண்களின் பரிதாபநிலை. இந்த தாற்பரியத்திலேதான் பெண்களுக்கான சகல இம்சைகளும் நடைபெற்று முதலைகள் தப்பிவிட மூஞ்சூறுகள் அகப்பட்டுப் போய் விடுபட முடியாத பேரவலத்தைச் சவாலாக எதிர்கொள்ளுகிறார்கள் பெண்கள்.**

கடமையில் கேட்கப்படுகிறார்கள். சின்னச் சின்னக் குறுகிய கால நேர அவகாசங்களில் இரசிக்கப்படுகிறார்கள். ஆனால் வீட்டில் கடுமையாக விமர்சிக்கப்படுகிறார்கள். இதனைத் தெட்டத் தெளிவாக அறியவும் அறிவிக்கவும் ஊடக தர்மம் வழிபுரிகிறது.

சுருக்கமாகச் செப்புவதானால், மனித வர்க்கமானது ஒரு முகத்தோடு மட்டும் பழகுவது என்பது முற்றுந்துறந்த முனிவர்கள் உட்பட எவராலும் காப்பாற்ற முடிவதில்லை. மாறாக, பல முகங்கள் பலவிதமாக பல வேளைகளில் பல சந்தர்ப்பங்களில் பல பொழுதுபோக்குகளில் பல பயணங்களில் பல விழாக்களில் பல அழைப்புக்களில் பற்பல தனிமைகளில் பெண்கள் சுவாசிக்கப்படுகிறார்கள். உலகிலே பெரும்பாலும் ஊருக்குபதேசம் செய்பவர்களாலேயே பாருக்குள்ளே ஷேத்திரங்கள் பேறாக்கப்படுகிறது என்பதற்கப்பால், அவர்களைவிட சாதாரண பாமர மக்களால் தூய்மையாக்கப்படுகிறது. பேச எழுத வாசிக்க படிக்க இயலாத சாதாரண மக்கள் உலகில் எதையும் சாதிக்கவும் சவாலாகவும் மேற்கொள்ளும் பாக்கியத்தை அதிலும் பெண்கள் வரமாக்கியுள்ளார்கள். இதன் விளைவாக, உலகில் பத்துக் கோடிக்கும் அதிகமான உளப் பலம், உடற்பலம் கொண்ட பெண்கள், தம்மைச் சீண்டவும், தீண்டவும் முனையவோ முனைவிக்கவோ ஆண்களால் எடுக்கப்படும் அத்தனை முயற்சிகளையும் தவிடுபொடியாக்குகின்றனர்.

பன்னிரண்டு வீதமான பெண்கள் தமக்கு நடந்தவற்றை இயம்பமுடியாத பாவிகளாக உள்ளனர். ஆண்கள் தப்பிவிடுகின்றனர். இதுவே மிகப்பெரிய சவால்! இருபது வீதமான பெண்கள், ஆண்களுக்கு விடுக்கும் எச்சரிக்கையோடு, தாம் பெற்ற பாதிப்புக்களிலிருந்து விடுபட்டுக் கொள்கிறார்கள்.

இதைவிட, முப்பது வீதமான பெண்கள் பலாத்காரம் செய்யப்பட்டு, வழக்குகளில் தீர்ப்புகளுக்காக ஏங்கித் தவிக்கிறார்கள். இருபது வீதமான பெண்கள் என்ன நடந்தாலும் ஏனையவர்களுக்குப் பகிரங்கம் செய்யாமல் மூடி மறைத்து அனுகூலமாக்கி, அனுசரித்து வாழ்ந்து ஆயுளை வச்சுரமாக்கிக் கொள்கிறார்கள்.

மேலும் பரிதாபமாக, ஐந்து வீதமான பெண்கள் காத்திராப்பிரகாரமாக தமது கன்னித்தன்மையையும், இளமையையும் பெரும்பெரும் புள்ளிகளுக்கு வழங்கும் உபகாரிகளாகச் சேவைபுரிகிறார்கள். இத்தகு நிலையை உலகில் எந்த நாடும் தடுத்ததாகவோ, தடுப்பதாகவோ இதுவரை வரலாறு இல்லை. காரணம் உலகில் பலருக்கு இதுவே அவசியம் தேவைப்படுகிறது. வேறுவிதமாகச் சொல்வதானால் உடற்பசியோடு உலகில் பெரும் ஞானிகள் வீதியுலா வருகிறார்கள். ஆனால் புனிதமான ஒரு மனிதனை உலகம் தேடியவண்ணம் உள்ளது. அது ஆண்களிலும் தேடப்படுகிறது. பெண்களிலும் தேடப்படுகிறது. மாறாக, தாமாகவே முன்வந்து தம்மை நிரூபணம் செய்யும் புனிதமான எவரும் இல்லையென்று சொல்லிவிடவும் முடியாது.

இதற்குச் சவாலாக சாதாரண மக்களும், தொழிலாளிகளும். போதையாளர்களும், மதுப்பிரியர்களும் அனுபவிக்கவல்லதாக எதிர்கொள்ளும்படி நாடளாவிய ரீதியில் காமதான அமைப்பினர் பல்கிப்பெருகி வருவது சமூகங்களுக்கு மட்டுமல்ல தெய்வங்களுக்கும் சவால்மிக்கதொன்றாக உணரப்படுகிறது. இவர்கள் நிரந்தர உழைப்பாளிகளாக எமது சமூகத்தால் சிருட்டிக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் தாம் விரும்பி இத்தொழிலுக்குச் சென்றவர்கள் அல்ல. வறுமையின் நிமித்தம் சேர்ந்தவர்களுமல்ல! சேர்க்கப்பட்டவர்கள். ஒவ்வொரு பிராந்தியங்களிலும் இந்த அமைப்பினர் செறிவாக இயங்குவதனால் எச் ஐ வி நோயானது வெகு எளிதாக இவர்களைப் பதம்பார்க்கிறது. இவர்கள் ஏன் இத்தொழிலுக்கு அடிமையானார்கள் என்று சமூகப் பொறுப்புக்கு உரிமையானவர்கள் இதுவரை பொறுப்புக் கூறமுடியாமையும் சவாலுக்குரியதொன்றாகும். சவாலாக எமது சமூகமட்டத்தில், உளவியல் ரீதியாக நீள நினைந்து வாழும் பங்கமுற்ற பங்காளிகள்:-

| | |
|---|---|
| இயம்பமுடியாதவர்கள் | 12% வீதமானோர் |
| எச்சரிக்கையோடு வாழ்பவர்கள் | 20% வீதமானோர் |
| வழக்கு மற்றும் பகிரங்கமானோர் (வெளிப்படையானோர்) | 30% வீதமானோர் |
| மூடிமறைப்போர் | 20% வீதமானோர் |
| உபகாரிகள் | 05% வீதமானோர் |
| பதம் கெடாத மீதமானோர் | 13%வீதமானோர் |

சுருக்கமாகச் சொல்வதானால் எண்பத்தேழு வீதமானவர்கள் அதுவும் பெண்களில் பெண்கள் சவாலோடு சமூகத்தில் நடமாடும் போது, மீதமான பதின்மூன்று வீதப் பெண்கள் சமச்சீராக அவர்களும் சவாலாக வாழவேண்டிய பொறுப்பில் தவித்திருக்கிறார்கள். எனவே பெண்கள் உலகிலும் சரி இலங்கையிலும் சரி குடும்ப ரீதியிலும் சமூக ரீதியிலும் தினந்தினம் கணம்கணம், காம, குரோத, மோக, இச்சை, இரசனை, பாலியல் நாட்டங்களினால் சூழப்பட்டுள்ளனர்.

நாளிலும் பொழுதிலும் ஊடக வாயிலாக வரும் செய்திகளினால் பெண்களின் நம்பகத்தன்மையையும் அவர்கள் மீது செலுத்தப்படும் குந்தகமான செயற்பாடுகளையும் கருத்திலும், கவனத்திலும் எடுத்துச் சீர்தூக்கிப் பார்க்கும் போது, இருபத்திநான்கு மணித்தியாலமும் கெடிக்கலக்கத்தோடும், கெட்டித்தனத்தோடும் தடித்தவோர் மனங்கொண்ட தலைமகளாய்ப் பெண்கள் சவாலோடு களிக்கும் அளவிற்கு நாடு திசைமாறியுள்ளது. போதைகளால் நாடு வெறிபிடித்து சின்னாபின்னமாகியுள்ளது.

தணிக்கை செய்யப்படாத, மன்மத லீலைகளை செயன்முறையாகப் புட்டுப்புட்டுக்காட்டும், இணைய தள மற்றும் சினிமாக் கவர்ச்சி, உடை நடை பாவனை, அங்கதரிசன, முத்தக்காட்சிகள் உள்ளிட்ட எல்லை தாண்டிய காம நுகர்ச்சிப் பயங்கரவாதம் ஆண்களில் ஊடுருவி, சரிபிழை தெரியாமல் குஞ்சு, குருமன், கன்னி குமரி அக்கா தங்கை, மாமி, மருமகள், தாய் மகள், ஆசிரியை மாணவி, விதவை, மனைவி என்ற பாகுபாடு பக்குவம், பயபக்தி, சகோதர, சகவாழ்வு, தர்மம், நீதி, நியாயம், ஒருவனுக்கு ஒருத்தி, சட்டம், தார்மீகம், பொறுப்பு, மதம், மார்க்கம், மகாபாரதம், இராமாயணம், திருக்குறள், பகவத்கீதை, நீதிநூல்கள் எல்லாமே தெரிந்தும் முத்து முத்தான சித்திரங்களான பெண்களைக் கசக்கிப் பிழிந்து தூக்கி வீசி கொலையும் செய்துவிடுகின்ற அகோரமான சமூகமொன்று உருவாகிக் கட்டுக்கடங்காமல் வளர்ந்து விட்டது.

85000இற்கும் மேற்பட்ட பெண் தலைமைத்துவ விதவைக் குடும்பங்கள் வாழவழி தெரியாமல் தவிக்கின்றன. இவர்களுக்கு ஆன வழிகாட்டுதல், ஆன வீடுகள், ஆன உழைப்பு, ஆன பாதுகாப்பு, ஆன சேமிப்பு, ஆன மானியம் என்று எதுவுமே இல்லை. இத்தொகை இலட்சத்திற்கு மேல் என்று புள்ளிவிபரம் சான்று பகருகின்றது.

இதைவிட கல்வி பயிலும் பல மாணவிகள் பலன்கருதியோ பலன் கருதாமலோ, அஞ்சியோ, அஞ்சாமலோ, லஞ்சமோ மஞ்சமோ அல்லது தஞ்சமோ அல்லது விஞ்சவோ பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். இது இம்மண்ணில் வேரூன்றி விசமாகியுள்ளதே.

ஓர் உதாரண எடுத்துக்காட்டு:-

"OPERATION SUCCESS BUT PATIENT DEAD"

சத்திர சிகிச்சை பிரமாதம். ஆனால் நோயாளி இறந்துவிட்டார். இதுதான் பெண்களின் பரிதாபநிலை. இந்த தாற்பரியத்திலேதான் பெண்களுக்கான சகல இம்சைகளும் நடைபெற்று முதலைகள் தப்பிவிட மூஞ்சூறுகள் அகப்பட்டுப் போய் விடுபட முடியாத பேரவலத்தைச் சவாலாக எதிர்கொள்ளுகிறார்கள் பெண்கள்.

மானபங்கத்தில் சம்பந்தப்பட்டு உறுதிப்படுத்தபட்டட குற்றவாளிகள்- கொலையாளிகள் தப்பிவிடமுடிகிறதான சட்டத்தரணிகளின் தர்க்கோவுபாயம் வென்றுவிடுகிறது.

"பூனைகளுக்கு விளையாட்டு சுண்டெலிக்குச் சீவன்போகுதே" தவிர

இந்நிலையில் பெண்கள் என்பவர்கள் பெருந்தகையோர் எனப் போற்றப்படுகிறார்கள். அவர்களே பெரிய அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் தலைமைப் பீடத்தினை அலங்கரிக்கின்றார்கள். படிப்பிலும், பதவியிலும் பணியிலும் பள்ளியிலும் பளிச்சிடும் வகையில் வரந்தருகிறார்கள். இருந்தாலும் சவால்களும் சர்ச்சைகளும் சங்கடங்களும் எதிர்நீச்சல் போட்டு வெல்லக்கூடியனவாகும். விழிப்புணர்வும் தண்டனைகளும் சவால்களை முறியடிக்கும்.

ஆயிரம் கோவில்கள் கட்டுகிறோம் இங்கு
ஆனதொழில் வாய்ப்புக்கள் இல்லையே
ஆயிரம் விதவைகள் கண்ணீரில் கரைந்து
காலத்தை முடிக்கின்றார்கள்.

அடுக்கடுக்காய் கோபுரம்
கோடியில் கட்டி முடிக்கின்றோம்
ஆனால் அருமந்த பிள்ளைகளின்
அந்தரங்கம் சூறையாடப்படுகிறது
நம்நாட்டில்!

பாயிரமாய் புராணங்கள் பதிகங்கள்
பத்திரிகைகளில் விமரிசையாய்
படிக்கப்படுகிறது
பாடப்படுகிறது
ஆனால்
பட்ட காலிலேதான் காயம் படுகிறது
கெட்டகுடியேதான் கெடுகிறது- மனிதப்
பாதைகள் செப்பனிடப்படவுமில்லை- அப்
பயணங்கள் முடிக்கப்படவுமில்லை!

இட்டமுடன் பெண்கள் இங்கு இன்றும்
எழுந்தமானமாக நடமாடமுடியவில்லை;
எழுகின்ற சவால்களுக்கு ஏற்றபதில் கூற
இருக்கின்ற ஆயுள் முடிவடைந்து விடுகிறது.

இலங்கையில் சவால்கள் வெல்லப்படவில்லையே! அதனால் இனியொரு விதி செய்தேயாக வேண்டும்.

❋

# சில்வர் பேணி

வ. ரொபின்
புன்னாலைக்கட்டுவன்



சித்தி வீட்டு விறாந்தையில் நயிலோன் கயித்தால் கட்டியிருந்த கட்டில் அளவு பலகையில் அமர்ந்திருக்கும் வேணு வீடு முழுக்க இழுபட்டு, அங்குமிங்கும் எறியப்பட்டு, கிழிந்து கிடந்த கொப்பியொன்றில் ஏதோ ஒரு கருவை அவசரமாய் பிரசவிக்க எண்ணி கிறுக்கிக் கொண்டிருக்கின்றான். ஏன் இந்தக் கிறுக்குத்தனம்? ஏதோவொரு காட்சியை விபரிப்பதற்காய்..., ஏதோவொரு கதையை எழுதுவதற்காய்..., ஏதோவொரு சம்பவத்தை நிதர்சனமாக்குவதற்காய்.... எத்தணிக்கின்றான். அவனால் முடியவில்லை... தனக்குத் தெரிந்தவாறு கீறிப் பார்க்கிறான்... எழுதிப் பார்க்கிறான்... அவன் நினைத்தது இன்னும் சரியாக அவன் கிறுக்குதலில் அம்பிடவில்லை. மீண்டும்... மீண்டும்... தான் கிறுக்கியவற்றை தானே கிழித்து எறிகிறான்.

தன்ர வீட்ட நிண்டு வேணு..... வேணு.... என்டு அம்மா கூப்பிடுறதையும் காதில் வாங்காது தனது கனவுலகில் ஏதோவொரு கருவைத் தேடி பேனா நுனியை வாயில் வைத்துக் கடித்துக் கொண்டிருந்தான். கூப்பிட்டுக் களைச்ச அம்மா ஊத்தியந்த தேத்தண்ணியைச் சட்டென்று சீமெந்துக் குந்திலே வைத்தாள். கனவுலகில் நிண்டு மீண்டு வந்தான் வேணு. தேத்தண்ணிய குடிச்சுட்டு எழுதுறத எழுது... எண்டு சொல்லிப்போட்டு வேகமாய் போனாள் சந்திரா. கோபமாகச் சொன்னாலும் மேனோட செல்லமாய்த் தனவுறது அவளுக்கு பிடிச்சதுதான். அவளுக்கு மட்டுமில்ல அவனுக்கும் தாயோட தனவுறதெண்டால் அலாதிப் பிரியம். சினந்துகொண்டே தேத்தண்ணி சில்வரை எடுக்கும்போது கைதடக்கி சில்வர் தட்டுப்பட்டு குந்திலிருந்து கீழே விழ முக்காவாசியும் ஊத்துப்பட டக்கென்று குனிந்தெடுத்தான். சில்வரை கையில் எடுத்தவுடன் கை வழியே மூளைக்கு மின்சாரம் பாய்ஞ்சது போல் தேடிய கரு சிக்கிக் கொண்ட சந்தோசத்தில் சிரிக்கிறான், சில நிமிடங்களில் மௌனமாகி கண்கள் கலங்குகிறான், கத்தி அழுகிறான். மீண்டும் தன்னைத் தானே சமாளித்துக் கொண்டு அந்தக் காட்சியை கமராவுக்குள் சிறைப்பிடிக்க கிறுக்கத் தொடங்குகிறான். இயக்குநராகவேண்டுமென்பது அவனது கனவு.

முன் காணிக்குள் வானுயர்ந்த பனை மரங்கள், பளபளக்கும் பாளைக் கத்தியுடன் கள்ளுச் சீவ வாற கந்தையா அண்ணேட்ட கெஞ்சிக் குளறி வெட்டி வாங்கிக் குடிக்கிற நொங்கு, வளவு மூலேக்க நிக்கிற புளிய மரம், நடுவிலே தோட்டம், அங்காலை சித்தி வீடு, தோட்டத்து வேலைக்கும், வீட்டு வேலைக்கும் அடிக்கடி வீட்ட வாற சீனியப்பு... கிளுவை மர வேலியிலே சடம்பில் கட்டித் தொங்க விட்டிருக்கும் சில்வர்பேணி... எழுதிய குறையில் ஏதோ ஒன்றை உணர்ந்தவனாய், குற்ற உணர்ச்சியில் உள்ளம் நொருங்கிப் போனவனாய், பல்லைக் கடிக்கிறான், மண்டையைச் சுவரோடு இடிக்கிறான், சில்வர் பேணியைத் தூக்கி தூரமாய் எறிகிறான், மீண்டும் ஓடிப்போய் அதை எடுத்துத் தடவிப் பார்க்கிறான்... மீண்டும் தன்னைச் சமாளித்துக் கொண்டு கிறுக்கத் தொடங்குகிறான்...

தனது ஊர் பாடசாலையிலே தரம் ஐஞ்சில் படித்துக்கொண்டிருக்கிறான். ஆசிரியர்களைக் கேள்விக் கணைகளால் கிறங்கடிக்கச் செய்பவன். தெளிவில்லாத பாடங்களையும், விடயங்களையும் விடுத்து விடுத்துக் கேள்வி கேட்பான். விதண்டாவாதம் செய்வதற்கல்ல தெளிவில்லாதவற்றில் தெளிவுறுவதற்காய். பிடிச்சதைச் செய்வதில் பிடிவாதம் கொண்டவன். நரைச்ச முடியும், சுருங்கின தோலுமாய், சுருட்டுப் புகைச்சபடி வேலைக்கு வாற சீனியப்பு எங்கட வீட்டு படலேக்க வந்ததும் சுருட்ட நூத்து வெத்திலைப் பையுக்க வச்சுட்டுத்தான் உள்ள வருவார். சீனியப்பு வீட்ட வாற நேரமெல்லாம் வேலியில் தொங்கும் சில்வர் பேணிக்க தான் தேத்தண்ணி குடுப்பா அம்மா. ஏனம்மா அவருக்கு அந்தப்பேணிக்க குடுக்கிறீங்கள் என்டால் அவையளுக்கு அப்படித்தான் குடுக்கவேணும் என்டு சமாளிப்பா. விருத்தெரியா வயசில அதுதான் வழக்கமாக்கும் எண்டு நானும் நம்பினன்.

நாங்கள் விளையாட்டுக்கு கூட அதை எடுத்து பயன்படுத்த அனுமதிப்பதில்லை. அதற்கான சரியான காரணத்தை அந் நாளில் என்னால் சரியாக விளங்கிக்கொள்ள முடியவில்லை…

அன்றொருநாள் வெள்ளிக்கிழமை நான் பாடசாலையால் வந்த வரத்திலே புத்தக வாக்கை கழட்டி எறிந்துவிட்டு “அம்மா சாப்பாடு” என்றேன். அம்மாவைக் காணவில்லை. வெள்ளிக்கிழமை என்பதால் வழமைபோன்று பக்கத்து காளி கோயிலுக்கு போட்டா என்று நானே சாப்பாட்டைப் போட்டுச் சாப்பிடுவதற்காய் குசினிக்குள் சென்றேன்.

வேலிக்கு கிடுகு கட்டிக்கொண்டு நிண்ட சீனியப்பு தண்ணி விடாய் தாங்காமல் “தம்பி… தம்பி… உங்கட அம்மா கோயிலுக்கு போட்டா போல, குடிக்க கொஞ்சம் தண்ணி தாவன்” என்று தொண்டை வறண்ட நிலையில் கறகறத்த குரலில் வார்த்தைகள் தடுமாறியபடி கேட்டார்.

“நில்லுங்கோ அப்பு, தாறன்” எண்டு சாப்பிட்ட குறையில் சாப்பாட்டுக் கோப்பையை வைச்சுட்டு பித்தளைச் செம்பில் தண்ணிய அள்ளிக் குடுத்தேன்.

அந்த மனுசன் மடக்கு மடக்கு எண்டு ஒரு செம்புத் தண்ணியையும் குடிச்சுட்டு “தம்பி இன்னுமொருக்கா அள்ளித்தாவன்” எண்டு செம்ப நீட்ட ஒரு கணம் என் பிஞ்சு மனசு தவிச்சுப் போய்ச்சு. இன்னுமொரு செம்புத் தண்ணியள்ளி சீனியப்புக்குக் குடுக்க அதையும் அவர் குடிச்சு முடிப்பதற்குள் அம்மா கோயிலால வந்த வரத்தில செம்பத் தட்டிப்போட்டு காதை பொத்தி எனக்கொரு அறை விட்டா…

இந்த அறை எனக்கில்லை சீனியப்புக்குத்தான் எண்டு அன்றே அறிந்து கொள்ளாதவனாய் வீரிட்டுக் குளறி அழுதுகொண்டு வேகமாய் ஓடினேன் சித்தி வீட்டை. என் இன்பங்களிலும், துன்பங்களிலும் என்னை அதிகம் அரவணைத்துக் கொள்வதும், ஆறுதல் சொல்வதும் அவள்தான்.

எனது அழுகைக்கான காரணத்தை அறிய எண்ணிய சித்தி என்னை விசாரிக்கும் போதே நான் விம்மி… விம்மி… நடந்தவற்றைக் கூறி முடித்தேன். எனது அழுகையை நிப்பாட்ட சித்தி சொன்ன ஆறுதல் வார்த்தை சற்று என்னை சமாதானப்படுத்தியது. தொழில் ரீதியாக கட்டமைக்கப்பட்ட சாதிய முறையின் ஏற்றத்தாழ்வுகளே இவ்வாறான நிலைக்குக் காரணம் எனக் கூறினார். மனிதர்களின் மனங்களில் மாற்றம் ஏற்படும் வரை இந்நிலமையை மாற்ற முடியாது என்றார். சீனியப்புவின் பேரன் சாந்தனும் என்னோடுதான் படிக்கிறான். ஒரு நாள் நான் சாந்தனிடம் புத்தகமொன்று வாங்கச் சென்றவேளை உள்ளே கூப்பிட்ட சாந்தன் “அம்மா என்ர வகுப்பு பெடியன் வந்து நிக்கிறான். தேத்தண்ணி ஊத்துங்கோ” என்றான். “ஓம் தம்பி” என்று குசுனிக்குள் இருந்து குரல் கொடுத்த சாந்தனின் அம்மா சற்று நேரத்தில் இருவருக்கும் ஒரே வகையான சில்வர் பேணிக்குள் தேத்தண்ணி கொண்டு வந்தாள்.

திடீரென “வேணு… வேணு… மத்தியானமாச்சு என்ன எழுதிக் கொண்டே இருக்கிறாய் வைச்சுட்டு சாப்பிட வா” என்றாள். கதை எழுதுவதை நிறுத்திய வேணு தனிமனித மாற்றமே சமூக மாற்றத்தின் ஆரம்பம் என்று சிந்தித்துக்கொண்டே வீடு நோக்கி நடக்கத் தொடங்கினான்.

அஞ்சலி:

## சங்கீத பூசணம் எஸ். கணபதிப்பிள்ளை



அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் சங்கீத பூஷணம் எனும் பட்டம் பெற்று பல பாடசாலைகளில் சங்கீத ஆசிரியராக பணியாற்றிப் பல சங்கீத விற்பன்னர்களை உருவாக்கி சங்கீத் பாடத்திற்கான பிரதிக் கல்விப் பணிப்பாளராகத் திகழ்ந்து பல விருதுகளும் பட்டங்களும் பெற்றும் கிழவன்காடு கலாமன்றத்தின் ஆலோசகராகவும் வட இலங்கை சங்கீத சபையின் உபதலவராகவும் நீண்ட காலம் வழிகாட்டியும் யாழ் பல்கலைக்கழக உள்வாரி வெளிவாரி இசைத்துறை மாணவ செய்முறை பரீட்சகராகவும் பல ஆண்டுகள் பணியாற்றியும் பல இசை அரங்குகள் கண்டு அண்மையில் மறைந்த சங்கீத பூஷணம் எஸ். கணபதிப்பிள்ளை அவர்களுக்கு எமது அஞ்சலி



# கண்டால் வரச்சொல்லுங்க...

# கர்ணன் திரைப்படம் தமிழ் சினிமாவின் தரத்தை உயர்த்துகிறதா?

ச. தனுஜன்

மாரி செல்வராஜ் இயக்கத்தில் தனுஸ் கதாநாயகனாக நடித்து அண்மையில் வெளிவந்துள்ள கர்ணன் திரைப்படம் இன்று பலராலும் பேசப்படுகின்றது. அதற்கு அத் திரைப்படம் பேசும் அரசியலும் ஒரு காரணமாக உள்ளது.

வழமையான தமிழ் சினிமா போன்று கதாநாயக முதன்மை, காதல், சண்டை போன்ற வியாபாரத்தை நோக்காகக் கொண்ட ஜனரஞ்சக விடயங்கள் இத்திரைப்படத்திலும் இருக்கிறது. ஆனால், அவை எல்லாவற்றையும் தாண்டி அது பேசும் சமூக நீதி சார் விடயங்களும், அவற்றைக் குறியீடுகளூடாக வெளிப்படுத்தும் கலைத்துவமும் இத் திரைப்படத்தை இன்றைய சாதாரண தமிழக சினிமாக்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றது.

1995 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்தில் கொடியன்குளம் என்ற கிராமத்தில் சாதிய அடக்குமுறையின் வெளிப்பாடாக, ஆதிக்க வெறிகொண்ட அயற் கிராமத்தவர்களாலும் தமிழக பொலிசாராலும் மேற்கொள்ளப்பட்ட பெரும் வன்செயலை மையமாக வைத்து உருவாக்கப்பட்டுள்ள இத் திரைப்படத்தின் கதையில் தமிழ் நாட்டில் இடம்பெற்ற வேறு சில சாதிக் கொடுமைகளும் அவற்றுக்கு எதிராகப் போராடிய மக்கள் தலைவர்களது உண்மைக் கதைகளும் இணைக்கப்பட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு காட்சியிலும் ஒவ்வொரு பதிவிலும் பல்வேறு தகவல்கள் பொதித்து வைக்கப்பட்டுள்ளமையைப் பார்க்கக்கூடியதாக உள்ளது. அந்த வகையில் பாத்திரங்களின் பெயர்கள் மிகவும் சுவாரசியத்தைத் தோற்றுவிக்கின்றன. அதாவது கதாநாயகனுக்கு பாரத நாட்டின் பெயரையுடைய மகாபாரதம் என்ற மாபெரும் இதிகாசத்தில் தேரோட்டியின் மகனாகச் சொல்லப்பட்டுப் பல்வேறு புறக்கணிப்புகளையும் எதிர்கொள்ளும் மிகப் பெரிய வீரனும் அவலமானதோர் முடிவைக் கண்ட அவலச்சுவை நாயகனுமான கர்ணனின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. அவனது காதலி திரௌபதி. மகாபாரதக் கதையில் திரௌபதியின் சுயம்வரத்தில் அநீதியான முறையில் கர்ணன் அவமதிக்கப்பட்டு வெளியேற்றப்படுகிறான். அவனது சாதியை முன்வைத்து அந்தப் புறக்கணிப்பு அரங்கேறியிருக்காவிட்டால், அந்த இதிகாசத்தில் கர்ணனே திரௌபதியின் கணவனாகியிருப்பான். இதேபோலவே துரியோதணன் என்ற பாத்திரமும் அமைக்கப்பட்டுள்ளது.


இவ்வாறாக மகாபாரதத்தை மீட்டுருவாக்கம் செய்யும் விதம், மகாபாரதத்தில் இடம்பெற்ற சமூக அநீதிகளை மாற்றியமைக்க முயலும் முறை இலகுவில் எம் மனதோடு இப் படைப்பை இணைத்துவிடுகின்றது. இத்திரைப்படத்தின் கதையோட்டம், காட்சித் தொடர்ச்சி எமது கண்கள் இமைப்பதை நிறுத்தும் அளவுக்கு எம்மை ஈர்த்துவிடுகின்றன.

மக்களின் ஒன்றுபட்ட எழுச்சியின் மூலம் மாத்திரமே சமூக மாற்றம் சாத்தியம் என்பதை வரலாறு எப்பொழுதும் உரத்துச் சொல்லிச் சென்றாலும், மீட்பர் ஒருவர் வருவார் என வீண் நம்பிக்கையை சில படைப்புகள் ஊடாக விதைக்க முயல்கின்றமை முரண்நகையாகவே இருக்கின்றது. எனினும் இத்தகைய படைப்புகள் மக்களின் மனதில் சில மாற்றங்கள் ஏற்படத் தூண்டுதலாய் அமையும் என்பதையும் மறுக்க இயலாது.



அஞ்சலி:

# நம்பிக்கை நட்சத்திரம் மரிய சேவியர் அடிகள்



சோ. தேவராஜா

கலைத்தூது அருட்கலாநிதி நீ. மரிய சேவியர் அடிகள் தனது 81-வது வயதில் மக்களைவிட்டுப் பிரிந்துவிட்டாரெனிலும் அவர் மறையவில்லை. மக்கள் ஆளுமைகள் மக்களைவிட்டுப் பிரிந்தாலும் அவர்களுக்கு மரணமில்லை. அவர்களின் சாதனைகளின் பொறுப்புகள் அடுத்த சந்ததிக்குப் பாரப்படுத்தப்படுகின்றன.

தனிமனிதரும் தோப்பாகலாம் என அடிகொடுத்தவர் அடிகள். புத்தக/ அரங்கப் பண்பாட்டினை மக்கள் மத்தியில் தரமுயர்த்திப் பிரபல்யப்படுத்திய அடிகள் பல்துறை ஆற்றல் பெற்ற பன்மொழிப் பயிற்சி பெற்ற பன்மைத்துவப் பண்பாட்டாளராவார்.

1939-12.03 ம் திகதி இளவாலையில் நீக்கலாம்பிள்ளை+எமிலியாம்பிள்ளைக்கு மகனாகப் பிறந்தார். 01.04.2021இல் பிரியாவிடை பெற்றார். 06.04.201இல் யாழ். புனிதமரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலிப் பாடல்களுடன் இறுதி நல்லடக்கம் செய்யப்பட்டார்.

இளவாலை, யாழ்ப்பாணம், கண்டி, ரோம், லண்டன், ஜேர்மனி எனக் கல்விப் புலத்தில் புடம்போடப்பட்டு மூன்று கலாநிதிப் பட்டங்கள் பெற்றார். 23 வயதிலேயே குருவாகி யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும் பல கிராமங்களில் பங்குத்தந்தையானார்.

1965இல் திருமறைக் கலாமன்றத்தை உருவாக்கி 1988இல் Centre for Performing Arts என்ற ஆற்றுகைக் கலைகளின் மையத்தை வளர்த்தெடுத்து ஆறு தசாப்தமாக எல்லைகடந்த மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் துலங்கினார்.

1965ல் 'அமைதியின் அண்ணல்', 1969-ல் 'அன்பில் மலர்ந்த அமர காவியம்', 1973-ல் 'களங்கம்' என அரங்க செயற்பாட்டில் 300க்கு மேற்பட்ட நாடகங்கள் வரை அரங்கேற்றினார். 1990-ல் 'கலைமுகம்' சஞ்சிகை, Jounal of Siddhanta Studies' பருவ இதழையும்,'ஆற்றுகை' அரங்கியல் இதழையும், கலைமுகம், அரங்க வலைகள் ஆகிய அரங்கியல் ஆய்வு நூல்களையும் 'நகையகம்' மொழிபெயர்ப்பும் பிற 12 நாடக நூல்களையும் பிற நூல்கள் பலதையும் வெளியிட்டார். மேலும் திருமறைக் கலாமன்றம் மூலம் 12 நாட்டுக் கூத்து நூல்களும் 17 வேதாகம நாடகங்களும் ஒலிநாடாக்கள் இறுவட்டுக்களும் வெளியிடப்பட்டன. இலங்கை வானொலி, தொலைக்காட்சியிலும் நாடகங்களை ஒலி-ஒளி பரப்பினார்.

அருட்திரு மைக்கேல் றொட்றிகோ, அருட்திரு இராயப்பு, ஆயர் எமிலி யானுஸ்பிள்ளை, தியோகுப்பிள்ளை ஆண்டகை, எதிர்வீர சரத்சந்திரா, ஜெறோம் டி சில்வா, சோமலதா சுபசிங்க, மிரண்டா ஹேமலதா, குழந்தை ம. சண்முகலிங்கம், அ. தாசீசியஸ், சி. மௌனகுரு, அ. பாலதாஸ், மிக்கேல்பிள்ளை, அ. பிரான்சிஸ் ஜெனம், தையிரியநாதன், ஆசை இராசையா, எமில், வீரமணி ஐயர், ஜி. பி. பெர்மினஸ், பி. எஸ் அல்பிரட், வ. இராசையா, கம்பவாருதி ஜெயராஜ், ஜின்னா ஷெரிப்தீன், சி. சிவசேகரம், கமலினி செல்வராசன், சோ. தேவராஜா, சக்திதரன், மதுசூதனன், மாத்தளை கார்த்திகேசு, கா. சிவத்தம்பி, மு. பொன்னம்பலம், ஏ. இக்பால், பிரேம்ஜி ஞானசுந்தரம், தெளிவத்தை ஜோசப். அம்புறோஸ் பீற்றர், ஏ. வி. ஆனந்தன், யோ. யோன்சன் ராஜ்குமார், கயல்விழி, ஏ. ஆர். விஜயகுமார், யூல்ஸ் கொலின், அ. பேக்மன் ஜெயராஜ், ம. ஜேசுதாசன், ம. தைரியநாதன், பி. வைதேகி, நளாயினி இராஜதுரை, சாம் பிரதீபன், ஏ.பி. ஜெகதீஸ் ஆகிய பல தளங்களில் நண்பர்களையும் இணைத்து பல்துறைக் கல்வியாளர்ளையும் கலைஞர்களையும் கண்டு மகிழ்ந்தார்

இலங்கையில் 20 பிராந்தியங்களில் மன்றங்கள் அமைக்கப்பட்டன. 1954 முதல் அருட்திரு யோங்க அடிகள் வழியில் மனிதர் நடிக்கும் தமிழில் பாஸ் நாடகங்கள் எழுதி 25 க்கு மேற்பட்ட பாடுகளின் நாடகங்கள் எழுதினார். 19 தடவை புலம்பெயர் வெளிநாட்டுக்குக் கலைப் பயணங்களில் ஈடுபட்டார்.

ஒடுக்கப்பட்ட பல்லின மக்களின் தலைமகன் கலைத்தூது நீ. மரிய சேவியர் அடிகளின் பிரிவுத் துக்கத்தை நாம் அனைவரும் எமது இயக்கத்தளத்தில் பலமாக மாற்றுவோம்.

(ஆதாரம்: தெளிவத்தை ஜோசப், யோன்சன் ராஜ்குமார் கட்டுரைகள்)

அட்டையில் : ஓவியர் ஆசை இராசையா வரைந்த மரிய சேவியர் அடிகளின் தோற்றம்

# மானிடப் பிறப்புக்கொரு அவமானம் நீ

மட்டுவில் ஞானகுமாரன்



நீள இரவினில் வந்த அந்த
யானையின் ஓல ஒலி இதயத்தை பிழந்தது

ஒரு ஈனப் பிறவி கொளுத்தி எறிந்த நெருப்பு
உலக மனச் சாட்சியை
தீப்பிடித்து எரித்தது

ஏ மானிடா
மிருகங்கள் என்றால் அவ்வளவு
இளக்காரமா
நீ கூட மிருகத்தின்
வாரிசென்பதை மறந்து விட்டாயா

யானையை உயிரோடு கொளுத்திய நீ
மானிடன் அல்ல
மனித குலத்திற்கே
அவ மானிடன்

மனிதர்கள் நல்லவர்கள் என்றெண்ணிய
தும்பிக்கை ஒன்றின் நம்பிக்கை

அங்கே
பொய்யாகிப்போனது

இலை தழை தேடிவந்த யானையிலே
என்ன தான் பிழை இருக்கிறது
ஒன்றா ரெண்டா நீங்கள்
செய்யும் அநியாயங்கள்

அன்னாசிப் பழத்திலே
குண்டு வைத்துக் கொடுக்கிறீர்கள்

அது போய்வரும் பாதையில்
ஆணி வைத்து அடிக்கிறீர்கள்

யானைக்கும் அடிசறுக்கும் என்பார்களே
சொல்லுங்கள் இப்போ
அடி சறுக்கியது யாருக்கெண்டு

யானைக்கும் மதம் பிடிக்கும் என்பார்களே
இப்போது சொல்லுங்க
யாருக்கு மதம் பிடித்தது என்று

நியாயப்படி பார்த்தால் காடென்பது
உங்களுக் கான வீடு
உன் நிலத்திலே வந்து
உன்னையே துரத்துவது
சரியான செயலா

போய் வருக யானையே
போய் வருக என் கண்ணீரையும்
ஏற்றுக் கொண்டு போய் வருக
கடவுள் என்று ஒருவன் இருந்தால்
சும்மா இருப்பானா பார்த்துக்கொண்டு



Prop: T.Mahendran

துஷா Thusha

பல் மூக்குக் கண்ணாடியகம்

Opticans & Dental Works

கணினி மூலம் கண் பரிசோதித்து கண்ணாடி வழங்குபவர்கள்

Computerized Eye Testing

இல . 544 ,
ஆஸ்பத்திரி வீதி ,
யாழ்ப்பாணம் .

021 222 3461

# சொல்லாமல் செய்வோர் பெரியோர்

ஸ்ரீவேக்கா பேரின்பகுமார்



மாவட்டச் செயலகத்திற்கு முன்னால் இன்னும் அரை மணித்தியாலத்தில் நடைபெற இருக்கும் காணமல் போனோருக்கான போராட்டத்திற்கான ஒழுங்குகளைப் பார்ப்பதற்குக் கட்சியொன்றின் பிரமுகரும் அவரின் உதவியாளனும் வந்து இறங்கினர். மெல்ல மெல்ல செயலகம் இயங்க ஆரம்பிக்கும் காலை நேரம் வெளிமாவட்டங்களுக்கு விரைந்து கொண்டிருக்கும் வாகனங்களும் அவற்றின் வேகத்திற்குத் தப்பித்து வீதியோரமாக போய்க்கொண்டிருந்த உந்துருளிகளும் ஈருளிகளும் இவையெல்லாவற்றிலிருந்தும் ஒதுங்கி நடந்து போய்க்கொண்டிருந்தவர்களாலும் வீதி பரபரப்பாகியிருந்தது.

கட்சிப் பிரமுகருக்காகக் காத்திருந்த இரு இளைஞர்கள் தாங்கள் தயார்ப்படுத்தி வந்த பதாதைகளுடன் அருகே வந்தனர். அந்த வாசகங்களை அவர் வாங்கிச் சரிபார்த்தார்.

“பறவாயில்லை நல்லா இருக்கு... சரஸ்வதியம்மா இண்டைக்கு வருவா தானே”

“ஓம் வருவா” இளைஞர்களில் ஒருவன் பதிலளித்தான்.

“அந்த அம்மா வந்தால்தான் போராட்டம் சூடு பிடிக்கும். போனமுறை அம்மா கதைச்சதை எத்தினை பேர் செயார் பண்ணியிருக்கினம். வராட்டி எங்கட வாகனத்தைக் கொண்டு போயாவது ஏத்திக் கொண்டு வாங்கோ”

“மற்றவை?”

“அவையள் பஸ்சிலை வருவினம்”

இளைஞர்கள் தமக்குக் கொடுக்கப்பட்ட வேலைகளைச் செய்து முடிப்பதற்காக அந்த இடத்தை விட்டுப் போக, பிரமுகர் அங்குமிங்கும் சிறிது நேரம் நடந்தார். தன்னை நாலைந்து பேர் கண்டுகொள்ள வேண்டுமென்ற எண்ணம் அவரிடம் இருந்தது. நாலைந்து பேர் தன்னை இனங்கண்டு கொண்டனர் எனப் புரிந்துகொண்டதும்,

“தம்பியவை எல்லாத்தையும் பாருங்கோ... நாங்கள் ஒருக்கா ரவுண் பக்கம் போட்டு வாறம். வாறவையை ஒரு இடத்திலை பிடிச்சு வையுங்கோ நாங்கள் வந்திடுவம், பிந்தினால் தொடங்குங்கோ முடியேக்கையெண்டாலும் நிப்பம்.”

பிரமுகர் வாகனத்தின் பின்புறக் கதவைத் திறந்து உள்ளே அமர உதவியாளன் சாரதி இருக்கையில் அமர வாகனம் அரைவட்டமடித்துப் பிரதான வீதியில் ஏறிப்பறந்தது. குளிரூட்டப்பட்ட வாகனம். உயர்தர இருக்கைகள். அவற்றின் சுகத்தை அனுபவித்தவாறு அமர்ந்திருந்த பிரமுகர் முன்னர் நடைபெற்ற போராட்டத்தில் சரஸ்வதியம்மா பேசிய உணர்வு கொந்தளிக்கும் உரையின் ஒலி ஒளிப்பதிவைத் திறந்து பார்த்தார்.

“தம்பி இந்த வீடியோவைப் பாத்தனிங்களோ?”

உதவியாளரின் தலையாட்டலின் பின்புற அசைவை வைத்து அவன் பார்க்கவில்லை என்பதைப்

புரிந்துகொண்டு அந்தப் பதிவைக் கொடுத்தார். அதை வாங்கிப் பார்த்தவாறே வாகனத்தைச் செலுத்தினான். இடையிடையே

“என்ன துணிச்சலா இந்த அம்மா கதைக்குது. நல்ல பேச்சுத்தான். அண்ணை இந்த அம்மா கையிலை வைச்சிருக்கிற போட்டோவை சூம் பண்ணித்தாங்கோ ஒருக்கா பாப்பம்.”

சாரதி பின்புறமாக நீட்டிய கையடக்கத் தொலைபேசியை வாங்கிச் சொன்னதைச் செய்து மீண்டும் ஒப்படைத்தார். அவன் படத்தை சிலகணம் பார்த்தான்,

“அண்ணை இந்தப் பெடியனை எனக்குத் தெரியும்”

“எனக்கும்தான் தெரியும்”

வாகனம் முன்னால் சென்ற வாகனத்தோடு நடைபெற இருந்த மோதலைத் தவிர்த்துச் சடுதியாக வீதியை உரசியவாறு இயங்குநிலையை நிறுத்தியது. பின்னால் அடுத்தடுத்து வாகனங்கள் நிற்க மீண்டும் இயங்குநிலையை வேகமாகச் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது.

“ஓ..... இப்பதான் ஞாபகம் வருகுது ஓமண்ணை வினோதனை உங்களுக்குத் தெரியும் அப்ப ஏனண்ணை தாய்க்கு சொல்லேல்லை”

“நீயும் வினோதனும் வேறையொரு பெடியனுமெல்லோ அங்க இருந்தனியள்”

கேள்விக்குப் பதில் சொல்லாது கதையின் போக்கை திசைதிருப்பி விட்டார்.

“ஓமண்ணை நீங்கள் வரேக்கை பங்கருக்கை மூண்டு பேருந்தான். முதலிலை ஒரு பத்துப்பேர் இருந்தனாங்கள் ஆமிக்காரர் கொஞ்சம் கொஞ்சமாக விசாரணைக்கெண்டு கூட்டிக்கொண்டு போனபிறகு வினோதனை இறக்கினவங்கள். அப்பவே பெடியனுக்கு காயம் நாங்களும் எங்களிட்டை இருந்ததுகளைக் கொண்டு இரத்தம் வராமல் பாத்தம். மற்றப்படி ஒண்டும் செய்யேலாமல் போச்சுது. பெடியன் பாவம் வேதனையோட போராடினான். கடைசியாத்தான் உங்களை இறக்கினவங்கள். அந்த நேரம் பெடியன்ர உயிர் போட்டுது. பிறகு எங்களைக் கொண்டுதானே அந்தப் பெடியனை அந்தப் பங்கருக்கையே மூடினவங்கள். எங்கட கதையும் முடியுதுதெண்டு நினைக்க, ஒருத்தன் வந்து களவாக சனத்தோட சனமா எங்களைத் தள்ளிவிட்டிட்டான்.”

பழைய நினைவுகளின் வேதனை முகத்தில் படர நடந்த கதையை நினைவுபடுத்தினான்.

“ஒரு தத்து கழிஞ்சுது” என்றவாறு பிரமுகர் தன் உதவியாளனின் தோளில் தட்டினார்

“சரியண்ணை ஏன் தாய்க்கு சொல்லேல்லை?” மீண்டும் அதே கேள்விவரத் தடுமாறியவர்.

“ஆ... ஆ... தன்ர பிள்ளை உயிரோடை இருக்கட்டும் எண்டு தான் பாவம் மனிசி மகன் எங்கேயோ இருக்கெண்டு சந்தோசமாக இருக்குது”

“சந்தோசமா இருக்குதோ? உது பொய்” எனக்கு நடந்ததைச் சொல்ல மனம் துடிக்குது.

“தம்பி முதலிலை வானை நிப்பாட்டு”

வாகனம் வீதியின் ஓரமாக நிறுத்தப்பட்டது. பிரமுகர் பின்னிருக்கையில் இருந்து இறங்கி முன்னிருக்கையில் போய் அமர்ந்தார்.

“சும்மா இரு தம்பி... ஒண்டையும் கெடுத்துப் போடாதை, பேப்பர்காரன்கள் கட்சியைப்போட்டுக் கிழிக்கிறாங்கள். ஆனால் எனக்கு இப்பவொண்டு விளங்குது. காணாமல் போனோருக்காக நடக்கிற போராட்டத்திலை எல்லாரும் வந்து பங்குபற்றுவினமானால் அரைவாசிப் பேரை கண்டுபிடிச்சிடலாம் போல..”

“சரி... வந்தாலும் உங்களைப் போல எல்லாரும் மறைச்சிட்டினம் எண்டால்?”

சங்கடமான ஒரு கேள்வியைக் கேட்டபோது பிரமுகரின் கையடக்கத் தொலைபேசி ஒலிக்கவே உரையாடல் இடைநிறுத்தப்பட்டது. மறுமுனையில் பேசுவதை மட்டும் கேட்டவர்.

“தம்பி வாகனத்தைத் திருப்பு, வெளிநாட்டு மீடியாக்களும் வந்திருக்குதாம். நாங்களும் அங்கே போய் நிக்கிறதுதான் சரி. வாகனம் மீண்டும் மாவட்ட செயலகத்திற்கு முன்னால் நின்றது. முப்பது பேர் கூடியிருந்தனர். குழந்தைகளோடு மூன்று இளம் தாய்மாரும், சரஸ்வதியம்மா போன்ற அன்னையரும், இரண்டு தந்தையரும், கட்சிகளின் சார்பாக நாலைந்து பேரும், வழமையாக வந்துதவும் சிலரும், புதிய இளைஞர்கள் இருவரும் கூட்டத்தில் அடங்கியிருந்தனர்.

“பார் அதுக்கிடையிலை மோப்பம் பிடிச்சு வந்திட்டாங்கள். புதுப் பெடியள் வெளிநாடுகளுக்குப் போய் விசா எடுக்கிறதுக்கு நிக்கினம்”

“அதுக்கேன் இஞ்ச.....”

“நிக்கிற போட்டோக்களைக் காட்டினால் விசாக் குடுக்கிறாங்களாம்”

பிரமுகர் உதவியாளனிடம் இரகசியமாக முணுமுணுத்தார். ஆயினும் வந்திருந்த எல்லோரையும் பார்த்து புன்னகைத்தவாறு, காணாமல் போன தங்கள் பிள்ளைகளின் கனவுகளைச் சுமந்தவாறு தள்ளாடும் வயதிலும் நீண்ட தூரம் பிரயாணித்து வந்திருந்த அன்னையர்களின் அருகே போனார். அதே கணம் வந்திருந்த ஊடகக்காரர்களையும் நோட்டமிட்டார்.

“தம்பி... பிள்ளையளைப் பற்றி நல்ல செய்தி ஏதும் வந்ததே?”

“ஓம் அம்மா நல்லது நடக்கும் போல”

“தம்பி பத்து வருசமாய் அலையிறம்; ஏதும் ஒருத்தரும் சொல்லுறாங்கள் இல்லை”

“பயப்பிடாதயுங்கோ அம்மா. கடைசி வரைக்கும் உங்களோடை போராடுவன்.”

அவர்களது கேள்விகளுக்கு பதிலளித்தவாறு ஏற்கனவே தயார்ப்படுத்தி வைத்திருந்த பதாகைகளை எல்லாரிடமும் ஆளுக்கொன்றாக கொடுத்தார். அதை ஒருகையிலும் தாங்கள் தேடும் புகைப்படத்தை மறுகையினால் வாஞ்சையோடு அணைத்தவாறும் நிழல் பரப்பி நின்ற மலைவேம்பின் கீழ் அமர்ந்தனர்.

வாடி வதங்கிப் போயிருந்த முகங்களில் எத்தனை எதிர்பார்ப்புக்கள். இன்னும் நம்பிக்கையோடு காத்திருக்கும் அவர்களுக்கு அது தாராளமாக நிழலைக் கொடுத்தது. வீதியால் போனவர்களும் செயலகத்திற்கு வந்து போய்க் கொண்டிருந்தவர்களும் ஒரு தடவை திரும்பிப் பார்த்துவிட்டு மட்டும் நகர்ந்தனர். அவர்களுக்கு இது நிதமும் காணும் காட்சியாகிப் போய்விட்டது. வந்திருந்த ஊடகவியலாளர்களும் குறிப்பெடுப்பதிலும், புகைப்படப் பதிவுகளைச் சேகரிப்பதிலும் மும்மரமாக இருந்தனர்.

சரஸ்வதியம்மா வந்திருந்த தாய்மார்களில் பாலாம்பிகையம்மாவை காணாது தேடினார்.

“எங்கை பாலாம்பிகை”

“உங்களுக்குத் தெரியாதே. செத்து பத்து நாளாச்சாம் எனக்கும் நேற்றுத்தான் தெரியும்.

“ஐயோ கடவுளே..... இதோடை ஒம்பதாவது ஆள். பிள்ளையளை கண்ணால பார்க்காமலே போட்டுதுகள். நாளைக்கு நானோ தெரியேலை...”

பாலாம்பிகையின் இழப்பினால் சிந்தப்பட்ட கண்ணீர் பிள்ளைகளின் நினைவுகளைக் கிளர்ந்தெளச் செய்து எங்கட பிள்ளையளை எங்களுக்குத் தாருங்கள் என்ற இடிமுழக்கத்தை அவ்விடத்தில் தோற்றுவித்தது.

அங்கிருந்த ஊடகவியலாளர்களும் நடந்து முடிந்துவிட்ட சம்பவங்களைப் புதிதாகக் கேட்பது போலக் கேட்ட ஒவ்வொரு போராட்டத்திலும் தங்கள் பிள்ளைகள் காணமல்போன அந்தக்கண வலிகளை கண்ணீர் சிந்தி விபரிக்க, இவர்களும் சொன்ன கதைகளை மறந்து போனவர்களாய் கேட்டுக் கொண்டே இருக்கின்றார்கள். சரஸ்வதியம்மாவிடம் ஒலிவாங்கி போகின்ற போது நடந்த கதையை எத்தனை தடவை சொல்லுறது என ஒருகணம் நினைப்பார், ஆனாலும் ஒவ்வொரு தடவையும் சொல்லும்போது இன்னும் புதிதாக நூறு பேருக்காவது தகவல் போகும் என்ற நினைவு வந்து நிற்க, சலிக்காமல் சொல்வார்.

இருந்த இடத்திலிருந்து எழும்பி பேச முற்பட்டார். எழும்ப முடியாது முழங்கால் வலித்தது. அவரது தடுமாற்றத்தை உணர்ந்த பக்கத்திலிருந்தவர்கள் கைகளைப் பிடித்துத் தூக்கிவிட முயன்றனர். அவர்களது உடலும் அதைச் செய்ய முடியாது பலமிழந்து தடுமாற அங்கு வழமையாக உதவிக்கு வரும் இளைஞர்கள் ஓடிவந்து தூக்கிவிட்டனர். இந்த உதவியில் தன்மகன் வினோதனைக் கண்டவர் அவ் இளைஞர்களின் தலையினை வாஞ்சையோடு தடவிவிட்டார். அவர்களும் மெய்சிலிர்க்க அந்த இடத்தை விட்டுத் தாம் நின்ற இடத்திற்கு நகர்ந்தனர். அவர்களையே பார்த்தவாறு,

“என்ர பிள்ளை அந்தத் தம்பி மாதிரித்தான் இருப்பான்... ம்... கடைசி நேரம் எல்லாரும் வாவுனியாவுக்குப் போவமெண்டு வெளிக்கிட்டம். ஒத்தப்பிள்ளையெண்ட படியால் தம்பிதான் எல்லா வேலைகளையும் செய்தவன். கொஞ்ச சாமானும் கையிலை என்னையும் தகப்பனையும் பிடிச்சுக்கொண்டு வந்தவன். அப்ப றோட்டிலை ஆமிக்காரன்கள் நாலைஞ்சு பேரை பிடிச்சு வைச்சிருந்தவங்கள். அதிலை வினோதனோடை படிச்ச பெடியனும். தம்பி என்னட்டை சொன்னான். “அம்மா அதிலை கலைச்செல்வனையும் வைச்சிருக்கிறாங்கள். ஒரு சோலிக்கும் போகாதவன் பாவமம்மா” நீ அங்க பாக்காத தம்பி அவனை விடுவாங்களெண்டன் வினோதனுக்கு மனங்கேக்கேலை திரும்பிப் திரும்பி பாத்தான். அந்தப் பெடியனும் பாவம் இவனைப் பேசாமல் போகச் சொல்லி கண்ணைக் காட்டினான். அதை ஒரு ஆமிக்காரன் கண்டு போட்டு ஓடிவந்து என்ர பிள்ளையை பிடிச்சாங்கள். நானும் இவரும் பிள்ளைய்யைக் கட்டிப்பிடிச்சுப் போட்டம் அப்ப ஆமியோடை நிண்ட தமிழ் பெடியன், “ஏனம்மா பயப்பிடுறியள். நான் நிக்கிறன். ஒண்டும் யோசிக்காதையுங்கோ. சும்மா விசாரிச்சுப் போட்டு விடுவம்” எண்டான். நான் அவனை நம்பினன். என்ர பிள்ளையைக் கட்டிப்பிடிச்ச கையை விட்டன். அழ ஆரம்பித்த சரஸ்வதியம்மா “என்ர பிள்ளை எங்கையெண்டு சொல்லுங்கோ தூரத்திலை நிண்டாவது பாத்திட்டுப் போறன்”

எனத் தொடர்ந்த பேச்சு உணர்வுகளின் கொந்தளிப்பாய் வார்த்தைகள் எனும் ஏவுகணைகளாகத் தாவிப் பாய்ந்தன. இவ்வாறு ஒவ்வொருவரும் தங்கள் உணர்வுகளை கொட்டித் தீர்த்தார்கள். வழமை போல் எல்லாம் முடிந்து போக, அடுத்த போராட்டக் களத்தை தெரிந்து கொண்டு அவ்விடத்தை விட்டு கலைய ஆரம்பித்தனர்.

பிரமுகர் பதாதைகளை பொறுக்கிக் கொண்டிருந்த தன் உதவியாளனை ஓரமாக அழைத்துப் போனார்.

“தம்பி அந்தக் கலைச்செல்வன் என்ட பெடியனும் அந்தப் பங்கருக்கை இருந்தவனே..?”

“எனக்கு தெரியேலை அண்ணை மற்றைவேன்ர பெயர் தெரியாது..”

“ஒரு ஐயா பின்னாலை இருந்தார் அவற்றைக் கையில இருந்த போட்டோவை பாத்தனியே அதுதான் பெடியன்”

“ம் எல்லாப் படத்தையும் பாத்தனான்... ஆனால் அந்தப் பெடியன் எங்களோடை இருக்கேலை”

“அப்பாடா தப்பிச்சம். இல்லாட்டி இன்னொரு பாவம் கூடியிருக்கும்”

“பார் அதுக்கிடையிலை மோப்பம் பிடிச்சு வந்திட்டாங்கள். புதுப் பெடியள் வெளிநாடுகளுக்குப் போய் விசா எடுக்கிறதுக்கு நிக்கினம்”

“அதுக்கேன் இஞ்ச.....”

“நிக்கிற போட்டோக்களைக் காட்டினால் விசாக் குடுக்கிறாங்களாம்”

சரஸ்வதியம்மா போகப் புறப்பட்டார். ஏதோவொரு நினைவு வந்தவராக மீண்டும் திரும்பி அருகே வந்தார்.

“தம்பி எதையெண்டாலும் கெதியா செய்ய வேணும். உடம்புக்கு ஏலாமல் போச்சுது இவரை நில்லுங்கோவெண்டு வந்துவிட்டன். பாவம் மனிசன். இதுகளுக்கு வந்திட்டுப் போனால் கூடக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும். நீங்களும் பாவங்கள். எங்களுக்காக போராடுறியள். வினோதனும் உப்பிடித்தான் எல்லாருக்கும் இரங்குவான். வீட்டிலை இருக்கிற சாப்பாட்டையும் தூக்கிக் குடுத்துப் போடுவான். நாய், பூனை, கோழியெண்டு எல்லாம் வளப்பான். அந்தப் புண்ணியமாவது அவனை உயிரோடை என்னட்டை கொண்டுவரும்.

உதவியாளன் பிரமுகர் முகத்தை நிமிர்ந்து பார்த்தான். அந்த முகத்தில் எந்தச் சலனத்தையும் கண்டுபிடிக்க முடியாது போக, அதற்கு இயைபாகத் தன் முகத்தையும் வைத்துக் கொண்டான்.

“தம்பி வினோதனுக்கு ஒரு பொம்பிளையும் பாத்து வைச்சிருக்கிறன். தம்பி இந்த வருசம் வந்தால் முப்பது வயசு. வந்தவுடன் கல்யாணத்தைச் செய்து வைச்சிடனும். பொம்பிளையும் வடிவானவா அவையைக் கேட்டனான். பெடியன் வந்தால் செய்வமெண்டவை. இஞ்ச தம்பி நீங்களும் கல்யாணத்துக்கு வரவேணும்..”

“ஓம் அம்மா... வருவம்...”

“நேற்று தம்பி கனவில வந்தவன். அப்ப நான் கல்யாணத்தைப்பற்றிச் சொன்னனான். அவர் சொல்லுறார் அம்மா உங்களுக்கும் அப்பாவுக்கும் ஏலாமல் பேச்சுது. நான் உங்களை வடிவாய் பாக்கோணும். மருந்துக்குக் கூட்டிக்கொண்டு போக வேணும். குடிக்கக் கஞ்சியாவது வைச்சு தரோணும் எண்டும், ரண்டு வருசம் கழிச்சுக் கல்யாணத்தைச் செய்வமெண்டு பெரிய மனுசன் மாதிரிச் சொல்லுறார்”

“சரி தம்பி பன்ரண்டு மணிக்கு ஊருக்கு பஸ் இருக்கு வாறன்”

சிறிது தூரம் நடந்து சென்ற சரஸ்வதியம்மா மீண்டும் திரும்பி வந்தார்.

“ஒண்டைச் சொல்ல மறந்திட்டன். என்ர மடியிலை கொஞ்ச காலம் நிம்மதியாய் படுக்கோணுமாம்”

சரஸ்வதி அம்மா கண்ணிர் சிதற சிரித்தாள். முந்தானையால் முகத்தைத் துடைத்தவாறு தளர்ந்த நடையோடு நகர ஆரம்பித்தார்.

“அம்மா அடுத்த மாதம் ஒருக்கா கொழும்புக்குப் போய்க் கதைக்கோணும் வாறியளோ? நீங்கள் வந்தாத்தான் வடிவாக் கதைக்கலாம்” என்ற பிரமுகரின் கேள்விக்கு,

“கட்டாயம் வருவன்”

எனப் பதிலளித்து நடந்துகொண்டிருந்தார் அந்தத் தாய்.

---

மாணவர் ஆக்கம்:

# மகிழ்ச்சி

காஸ்மீரா மகேஸ்வரன்

மகிழ்ச்சியைத்
தேடிக்கொண்டே
இருந்தால்...
நிம்மதியைக் கூட
இழந்து
விடுவோம்...

வாழ்க்கையை
அப்படியே
ஏற்றுக்கொள்ள
கற்றுக் கொள்வோம்...
மகிழ்ச்சி தானாகத்
தேடிவரும்...!

எதிர்பார்க்காதே...
அன்பையும்
ஆதரவையும்

வளர்த்துக்கொள்
தைரியத்தையும்
தன்னம்பிக்கையையும்

எதிர்த்து நில்
துரோகத்தையும்
பகைமையையும்

துணிந்து செய்
நற்காரியங்களையும்
நற்செயல்களையும்

ஏற்றுக்கொள்
தோலைவிகளையும்
அவமானங்களையும்

மகிழ்ச்சி ஒன்றையே
இலக்காக வையுங்கள்...
கிடைக்கும் இடத்தில்
பெற்றுக்கொண்டு
கிடைக்காத இடத்தில்
கொடுத்துவிட்டுச்
செல்வோம்

நமக்குக் கிடைக்கும்
மகிழ்ச்சி என்பது
இடங்களைப் பொறுத்து
அமைவது இல்லை..
நம்மோடு
பயணிக்கும்
மனிதர்களைப்
பொறுத்தே
அமைகிறது...

# பெண்ணால் முடியும்...

மிதுவா சதானந்தநாதன்

பெண்ணாய் பிறந்து
அடிமைப் பெண்ணாய்- வாழ்ந்த
காலம் சென்று விட்டது.
என்னாலும் எதையும்
சாதிக்க முடியும் என்ற எண்ணம்
எல்லா பெண்ணின் உள்ளேயும்
ஒரு தைரியமாக வாழும்
காலம் இன்று வந்துவிட்டது.

எந்தத் துறையிலும் என்னாலும்
சாதனை படைக்க முடியும்
என்று நினைத்து முயற்சி
செய்வாள் எனின்- அவளை
மிஞ்சிய வெற்றியாளர்
யாரும் இல்லை.

ஆணுக்கு சரி நிகராகத்தான்
கடவுள் பெண்ணைப் படைத்தார்
அடுப்பறையில் அடுப்பூதி கொண்டிருந்த
அத்தக்கால பெண்- இன்று
கணினியின் முன்னால் தனது சாதனையின்
மூலம் மேலும் வளருகின்றான்.

பலதுறையிலும் பெண்ணின்
சாதனை பேசப்படுகின்றது- இனிவரும்
காலத்திலும் பேசப்படவேண்டும்
எல்லா பெண்களும் சிங்கப் பெண்ணாக
அழியாத தடம் பதிக்க வேண்டும்

# நாகதாளி

இதயராசன்

கிளிநொச்சி மத்திய கல்லூரி பிரதான மண்டபம் என்றும் இல்லாதவாறு அலங்கரிக்கப்பட்டு இருக்கிறது. ஏ 9 வீதிக்கு அருகில் பாடசாலை மண்டபம் மிகவும் விசாலமாகவும் சகல வசதிகளுடனும் அமைந்திருப்பதால், வடக்கின் வசந்தத்தின் பேரில் நடக்கும் அனைத்து நிகழ்வுகளும் மற்றும் ஏனைய விழாக்களும் இம்மண்டபத்தில் வழமையாக நடைபெறுவதால் வீதியால் போவோரும் வருவோரும் அதனைச் சாதாரணமாகக் கருதிச் செல்வார்கள்.

விழாக்கள் மலிந்த மாவட்டம் கிளிநொச்சி என்பது பலரது அபிப்பிராயமாகும். ஆனால் வாய் விட்டு சொல்ல மாட்டார்கள். ஏன் வாயைக் கொடுத்து புண்ணாக்குவான்? என்ற பட்டறிவோ தெரியாது. ஆனால் இன்று நிலைமை வேறு. கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், கல்விச் சமூகத்தினர் என அனைவரும் திருமண வைபவத்திற்கு, திருவிழாவிற்கு வருவது போல் மிகுந்த சந்தோஷத்துடன் வருகை தந்த வண்ணம் உள்ளனர். வீதியிலிருந்து மண்டபத்தின் வெளிப்பகுதி, உட்பகுதி அனைத்தும் கைதேர்ந்த கலைஞர்களால் சோடனை செய்யப்பட்டு, வல்வெட்டித்துறை இந்திரவிழாபோல் காட்சியளிக்கின்றது.

கடந்த வருடம் நடைபெற்ற கல்விப் பொதுத்தராதர சாதாரணதர, உயர்தர பரீட்சைகளில் திறமைச் சித்தி பெற்ற மாணவர்களையும் அதற்கு பங்காற்றிய ஆசிரியர்களையும் கௌரவிக்கும் விழாதான் இத்துணை பிரபல்யம் பெறுவதற்குக் காரணமாகும்.

வண்ண வண்ண உடை அலங்காரங்களுடன் பல்வகை வாத்தியங்கள் இசைத்து, இனியம் முழங்க, தமிழர் கலாசார முறைப்படி வரவேற்பு நடைபெற்று, அதிதிகள் விழா மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். இவ்விழாவில் கௌரவம் பெறுபவர்களில், மாணவர்களைக் கணித பாடத்தில் 80 வீதம் சித்தி அடைய வைத்த கணித பாட ஆசிரியர் என்ற வகையில் நானும் ஒருவன். என்னிடம் கல்விகற்ற சுலோஷனா என்ற மாணவி 9 A எடுத்து, மாவட்டத்தில் முதலாம் இடம் பெற்றுள்ளார். அந்தச் சிறப்பும் என்னுடையது ஆகையால், எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி.



என்னைவிட மகிழ்ச்சியில் பரிசில் பெற இருக்கும் மாணவர்கள், இம் மாணவர்களின் சாதனையைத் தமக்கான இலட்சியமாகக் கொண்டுள்ள சக மாணவர்கள் என அனைவரும் உடலும் உள்ளமும் மலர்ந்து காட்சியளித்தனர்.

இவ்வாறான விழாக்களில் நடைபெறும் சம்பிரதாய பூர்வமான அனைத்து விடயங்களும் கச்சிதமாக இடம்பெற்று, சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் மிக முக்கியமான கட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. கௌரவம் பெறும் மாணவர்களின் பெயர்களை அறிவிப்பாளர் அழகான, உரத்த குரலில் அவர்களின் பெயர், பாடசாலை, அவர்களின் சாதனை என்று விஸ்தாரமாக எடுத்துக்கூற, உரிய மாணவர்கள் மேடைக்குச் சென்று, கரகோஷத்திற்கு மத்தியில், மரியாதையுடன் தமக்கான கௌரவத்தினைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். சுலோஷனாவின் பெயர் அழைக்கப்படுகிறது. அவள் மேடைக்குச் செல்லவில்லை. அப்பொழுதுதான் சபையைப் பார்க்கின்றேன். அவளைக் காணவில்லை. ஏன் வரவில்லை என்று சிந்திப்பதற்கு இடையில், ஒரு மாணவி எனது கைக்குள், ஒரு கடதாசியை திணித்துவிட்டு செல்கின்றாள். அம்மாணவி யாரென்று பார்க்க அவகாசம் இல்லாமல் கடதாசியை விரித்துப் பார்க்கின்றேன்.

*மரியாதைக்குரிய ஆசிரியர்க்கு!*

*என்னை மன்னிக்கவும். எனது திறமையைப் பாராட்டுவதற்கு நன்றி. ஆனால் இந்தப் பாராட்டை*

ஏற்கும் மனநிலையில் நான் இல்லை. காரணம் என்னை விடவும் புத்திசாலியான எனது சகோதரிக்கு, எனக்குக் கிடைத்த கல்வி கிடைக்காததால், அவள் இந்தப் பரிட்சையில் தோற்று விட்டாள். என்னால் சந்தோஷப்பட எப்படி முடியும்?

இப்படிக்கு,
தங்கள் கீழ்படிவுள்ள மாணவி
சுலோஷனா.

எனக்குள் ஓர் அதிர்வு. கடிதம் கசங்கியபடி என் கரங்களில் கிடக்கின்றது. எதுவுமே நடவாதது போல் பரிசளிப்பு விழா தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இதனை வாசிக்கும் வரை ஏதோ சாதனை செய்து விட்டதாக நினைப்பில் மிதந்து கொண்டிருந்தேன். என் நினைப்பு எவ்வளவு தூரம் பொய்யானது என்பதனை நினைத்துக் கொள்கின்றேன். விழா மண்டபத்தை விட்டு எனது கால்கள் தானாகவே நகர்கின்றன. இவ்விழாவிற்கும் எனக்கும் சம்பந்தமில்லை என்பதைக் கால்கள் எனக்குச் சொல்கின்றன.

மனிதாபிமான நடவடிக்கையின் போது, மரியாதைக்காக இருதரப்பும் ஷெல்களை வீசித் தமது மரியாதையைத் தற்காத்துக்கொண்டனர். இதில் யாருடையதோ ஒரு மரியாதக்குரிய ஷெல், எனது குடும்பம் இருந்த பங்கரில் வீழ்ந்தது. எனது அன்பு மனைவி பாசத்திற்குரிய பிள்ளைகள் இருவரையும் காவுகொண்டது. அப்பொழுது நானும் நண்பனும் அவ்விடத்திலிருந்து, மண்மீட்பர்களிடமிருந்து தப்பிப் போவதற்கு, இரகசிய வழி பார்க்கப் போயிருந்தோம். விதி எம்மை விட்டு விட்டு, குடும்பத்தைப் பலி எடுத்துக்கொண்டது. சோகத்தில் அழுது புரள்வதைத் தவிர வேறு என்னதான் செய்ய முடியும். யார் யாருக்கு ஆறுதல் சொல்வது. எல்லோர் நிலையும் ஒரே விதமானதே. அச்சமயத்தில் மீண்டும் ஷெல் வீச்சு தொடங்கவே, பதறியடித்துத் திசை தெரியாமல் ஓடினோம். அவ்வாறான ஒரு தருணத்தில்தான் சுலோசனா, சரோஜா ஆகிய இரட்டை சகோதரிகளும் தாய் தந்தையரை பறிகொடுத்து, கூட்டத்தோடு கூட்டமாக அழுதபடி சென்றனர். இருட்டு. மடுவில் அவர்களின் சித்தி, அத்தை குடும்பத்துடன் சேர்ந்துகொண்டனர். மீண்டும் 'கிபீர்' வீச்சுக்குப் பயந்து ஓடிய போது அத்தையுடன் சேர்ந்து ஓடிய சறோ வழியைத் தவறவிட்டு, மீண்டும் சுலோஷனாவைச் சந்திக்கவே இல்லை இடையில் அத்தையின் பிள்ளைகள் இருவரும் பலியாக அத்தைக்குத் துணையாகச் சறோ மட்டுமே.

யுத்தம் நிறைவடைந்த பின்னர் வவுனியாவில் உள்ள அகதிமுகாமில், இருவரும் சந்தித்த போதிலும் அத்தையை விட்டு வரமுடியவில்லை. அத்தையின் பொருளாதார நிலை, இருவரையும் சேர்த்து கவனிக்க முடியாததினால், இருவரும் இரு குடும்பத்தில் வாழவேண்டிய நிற்பந்தம் ஏற்பட்டது. மீள்குடியேற்றத்தின் போது அத்தையின் கிராமத்திற்கே சென்றதால், அங்குள்ள பள்ளிக்கூடத்திலேயே சறோ கல்வி கற்றாள். அங்கு மாணவர்கள் அதிகமாக இருந்தபோதிலும் ஆசிரியர்கள் அங்கே செல்ல விரும்பாததால் அவர்களின் கல்வி படுமோசமாகப் பாதிப்படைந்தது.

இதேவேளை சித்தியின் குடும்பம் கிளிநொச்சி நகரில் அமைந்திருந்தமையால் சுலோவால் சிறந்த கல்வியைப் பெற முடிந்தது. இச்செய்திகள் யாவும் இப்பொழுதுதான் எனக்குத் தெரியும் என்று இல்லை. ஆனால் இவற்றினை ஏதோ தகவல் போலவே அறிந்து வைத்திருந்தேன். சுலோவின் கடிதம், எனது கண்களைத் திறந்து விட்டன.

தொடர்ந்தும் நகரப் பாடசாலையில் சகல வசதிகளும் உள்ள பிள்ளைகளுக்குக் கற்பித்து, நாம் ஏதோ சாதனை செய்து விட்டோம் என்று தற்பெருமை கொள்வதில், எந்த அர்த்தமும் இல்லை என்பதை அறிந்த பின்பும், நகரத்துப் பாடசாலையில் சேவையாற்றுகின்றேன் என்பதில் என்ன பெருமை இருக்கின்றது. கிராமத்துப் பாடசாலைக்குச் சுயவிருப்பின் பேரில் இடமாற்றம் கோரி விண்ணப்பிக்கின்றேன்.

கடற்கரையோர கிராமம் விவசாயமும் கடற்தொழிலும் அவர்களின் ஜீவனோபாயம். பெரிய அளவில் தொழில் செய்ய முதல் அவர்களிடம் இல்லை. பெரிய அளவில் கல்வியில் முன்னேறாத சமூகம். ஆனால் நகரத்தை விட மனிதாபிமானப் பண்புகள் நிறைந்தவர்கள். உழைப்பை நம்பும் உண்மையான மக்கள். அக்கிராமமும் பாடசாலையும் என்னை மிகவும் கவர்ந்து விட்டது. கணித பாட ஆசிரியரான என்னால் அப்பாடத்தை மட்டும் கற்பித்து மாணவர்களைச் சித்தி அடைய செய்ய முடியாது என்ற உண்மை இப்பொழுது புரியத் தொடங்கிவிட்டது. காரணம் கணிதத்தில் முன்னேற்றம் கண்ட மாணவர்களால் விஞ்ஞானம், தமிழ் போன்ற பாடங்களில் முன்னேற முடியவில்லை. அதற்கும் ஆசிரியர்கள் இருந்தால்தானே மாணவர்களால் கற்க முடியும். மாலை நேரங்களில் அப் பாடங்களை நான் விருப்போடு மாணவர்களுக்குக் கற்பிக்கிறேன்.

கடுமையான யுத்தம் நடைபெற்ற காலங்களில் நகரத்தை அண்டிய பிரதேசங்களில் வசிப்பது உயிருக்கு உத்தரவாதம் இல்லை. அதனால் நான் இப்பொழுது கற்பிக்கும் கிராமங்களில் வசிப்பதற்கு, இடம்பெயர்ந்த மக்களில் கணிசமான ஆசிரியர்களும் இருந்தனர். கிராமப் பாடசாலையின் தேவைக்கு அதிகமாக, முக்கியமான பாடங்களுக்கு முண்டியடித்து இடம் பிடித்தனர். மேலிடத்து சிபார்சினையும் பெற்றனர். யுத்தகாலத்தில் உயிர்காத்தது., உணவும் உறையுளும் வழங்கிய பட்டிக்காடு, போக்குவரத்து வசதி இல்லாத இடமாக அவர்களுக்குத் தென்படவில்லை. நுளம்பு, பாம்பு, குரங்கு, வெயில், மழை, வெள்ளம் எதுவுமே அவர்களுக்குப் பொருட்டாகத்

தெரியவில்லை. ஆனால் யுத்தம் முடித்து வைக்கப்பட்டு, ஆனையிறவுப் பாதை திறக்கப்பட்ட பின்பு, யாழ்ப்பாணம் மட்டுமே சொர்க்கபுரி ஆகிவிட்டது. வன்னி பட்டிக்காடாகிவிட்டது. இங்குள்ள மக்கள் மனிதப் பூச்சிகளாகி விட்டனர். தமிழ்த் தேசிய இனம், பண்பாடு, கலை, கலாசாரம் அனைத்தையும் இழந்து, அனுதாபத்திற்கு மட்டும் உரியவர்களாகிவிட்டனர். இவர்களை வைத்துப் பிழைப்பு நடத்தும் ஒரு கூட்டத்திற்கு மட்டும் அட்ஷய பாத்திரம் ஆகிவிட்டனர்.

யுத்தகாலத்தில் புகலிடம் தேடி வாழ்ந்த ஆசிரியர்களும் கல்விமான்களும் தமது உயிரைக்காத்த, உணவும் உறைவிடமும் பாதுகாப்பும் வழங்கிய மக்களை மறந்துவிட்டனர். உப்பிட்டவரை உள்ளளவும் நினை என்பர் மூத்தோர். உயிரைக் காத்தவரை பரம்பரையல்லவா நினைக்க வேண்டும்? தமது ஆரோக்கியம், வாழ்க்கைத்துணையின் சௌகரியம், பிள்ளைகளின் படிப்பு எனத் தமது குடும்பத்தை மட்டுமே கவனிக்கும் சுயநலமிகள் ஆகிவிட்டனர். வன்னி மக்களில் செத்தவர் போக, மீதிப்பேர் காட்டில் விலங்குகள் போல வாழ்வதும், ஆண்டொன்று போனால் வயதொன்று போகும்தானே! சோறும் கறியும் இருக்கு, வேறென்ன வேண்டும் என்ற மனப்பாங்கே மேலோங்கிவிட்டது.

யாழ் மாவட்டத்தில் உள்ள ஆசிரியர்களில், கஷ்டப் பிரதேசத்தில் சேவையாற்றாதவர்கள், கட்டாயம் வன்னிப்பிரதேசத்தில் இரண்டு வருடம் கடமை புரியவேண்டும் என்ற கட்டாயம் வந்த வேளையிலும், செல்வாக்கு உள்ளவர்கள் சுற்று நிருபத்தில் உள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தி, தம்மை தக்கவைத்துக் கொண்டனர். அது முடியாதவர்கள் பொறியில் மாட்டிய எலிகளாய் அல்லாடுகின்றனர். எந்தவிதமான வசதியும் இல்லாத வேளையில் குடும்பத்துடன் வன்னியில் குழந்தை பெற்று, வயதான தாய் தந்தையுடன் வாழ்ந்தவர்கள், யுத்தம் நிறைவடைந்த பின்னர், வசதிகள் அதிகரித்துக் கொண்டிருக்கும் காலகட்டத்தில், வன்னி கிராமமொன்றில் ஒரு வாரம்கூடத் தங்குவதற்குப் பிரியப் படுகின்றார்கள் இல்லை. இந்நிலையில் வன்னி மக்கள் யார்? தமிழினம் இல்லையா? வேறு ஏதாவது வெளிநாட்டவர்கள் வந்துதான் உதவி செய்ய வேண்டுமா? அல்லது இவர்கள் படித்து முன்னேறி விட்டால் யாழ்ப்பாணத்துத் தொழில் வங்கி சுருங்கிவிடும் என்ற பயமோ தெரியவில்லை. ஒவ்வொருவரும் தம்மைத் தவிர்த்துவிட்டு, அடுத்தவர்களை நோக்கி சுட்டு விரலை நீட்டுகிறார்கள். நாங்கள் எல்லோரும் தமிழர்கள் என்ற கோஷம் இவ்வளவு தூரம் உண்மையானது என்பது, இப்போது பட்டவர்த்தனமாகி விட்டது.

வாடும் பயிர்களுக்குதானே நீர் ஊற்ற வேண்டும். நான் கடமை புரியும் கிராமத்து மக்கள் வறுமையில் வாடினாலும் கல்விக்காக எதையும் செய்யத்

**ஆனையிறவுப் பாதை திறக்கப்பட்ட பின்பு, யாழ்ப்பாணம் மட்டுமே சொர்க்கபுரி ஆகிவிட்டது. வன்னி பட்டிக்காடாகிவிட்டது. இங்குள்ள மக்கள் மனிதப் பூச்சிகளாகி விட்டனர். தமிழ்த் தேசிய இனம், பண்பாடு, கலை, கலாசாரம் அனைத்தையும் இழந்து, அனுதாபத்திற்கு மட்டும் உரியவர்களாகிவிட்டனர். இவர்களை வைத்துப் பிழைப்பு நடத்தும் ஒரு கூட்டத்திற்கு மட்டும் அட்ஷய பாத்திரம் ஆகிவிட்டனர்.**

தயாராய் இருக்கின்றனர். மாதா பிதா குரு தெய்வம் என்பதை இன்னமும் மதிக்கின்றனர். ஒவ்வொரு விடயத்தையும் கற்க கற்க மாணவர்களின் ஆவலும் அதிகரித்த வண்ணமே உள்ளது. நகரத்தில் சோம்பி இருந்த எனக்கு, இப்பொழுது புதிதாகக் கற்கும் பாடப்புத்தகமாக மாணவர்களும் மக்களும்.

சுலோஷனாவின் கடிதத்தினால் விழிப்படைந்து, இப்பாடசாலைக்கு வந்ததிலிருந்து, மனநிறைவுடன் எனது கவலைகள் என்பது என்னவென்றே தெரியாமல், மாணவர்களுடன் ஒன்றித்து விட்டேன். கட்டிடவசதிகள் போதாமையால், எனது வகுப்பினை ஆலமர நிழலில் நடாத்திக் கொண்டிருக்கின்றேன். பாடசாலை வேலிக்கு அடுத்த காணியில், முதிய விவசாயி ஒருவர் செழித்து வளர்ந்திருந்த கள்ளிச் செடிகளை வெட்டுக் கத்தியால் வெட்டி, மண்வெட்டியால் அதனை வேருடன் பிடுங்கிக் குவிக்கின்றார். அவரின் செயல் எனக்கு விளங்கவில்லை. மாணவர்களுக்குக் கணக்கு செய்யக் கொடுத்துவிட்டு, முதியவரை நோக்கிச் செல்கின்றேன்.

“பெரியவரே! இந்தச் செடிகள் செழித்து வளர்ந்து கூட்டமாக நிற்கும் பொழுது பார்க்க நல்ல அழகாகத்தானே இருக்கின்றன. நான் எத்தனை நாட்கள் பார்த்து ரஷித்திருக்கின்றேன். ஏன் இதனை வெட்டி அழிக்கிறீர்கள்?”

அறிவார்ந்த வினாவினை முதியவரிடம் கேட்டு விட்டதாக, என்னது மேதாவித்தனத்தை நானே மெச்சிக் கொள்கின்றேன்.

முதியவர் என்னைப் பார்த்து, ஒரு நமட்டுச் சிரிப்பு சிரித்து விட்டு, தனது தொண்டையைச் செருமி, இருமலை காறித் தனக்கு எதிர்ப்புறமாகத் துப்பிவிட்டு,

“தம்பி! இங்கே பாரும், இந்த இடம் செழிப்பான பூமி. கத்தரி, வெண்டி, மா, பலா, தென்னை என்று எத்தனையோ பயனுள்ள பயிர்கள் வளர்ந்தால் எல்லோருக்கும் பயன் கிடைக்கும். ஆனால்

இந்தச் செடி பச்சைப் பசேலென்று செழிப்பாக வளர்ந்திருக்கு. இந்தச் செடியைத் தவிர வேறு யாருக்கு என்ன பயன். இந்த இடத்தில் வேறு எந்தப் பயிரையும் வளரவிடாமல் தான் மட்டுமே வளர்கின்றன. அழகாக இருந்தால் மட்டும் போதுமா? பயன் கொடுக்க வேண்டாமா?"

பழுத்த அவருடைய வார்த்தைகளுக்கு முன்னால், எனது படிப்பு எம்மட்டு. இருப்பினும் இலேசில் விட்டுக்கொடுத்தால், எனது பட்டம் பதவிக்கு என்ன மதிப்பு. எனது எதிர்க் கேள்வியினைக் கேட்கின்றேன்.

"பெரியவரே! கள்ளிச் செடியைத்தானே நாவூறு கழிக்க, வீட்டுக்கு முன்னால் வைத்திருப்பார்கள். மருந்துத் தேவைக்குக் கள்ளிப்பாலும் பயன்படும்தானே!"

இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வார் என, ஆவலுடன் அவரைப் பார்க்கின்றேன்.

அவர் எவ்வித பதட்டமும் இல்லாமல், மிக நிதானமாகத் தனது பதிலைச் சொல்கின்றார்.

"தம்பி! கள்ளிச்செடி வரண்ட நிலத்தில் வளர்கின்றது. நீர் இல்லாத காலத்தில் இலையில் சேமித்து வைத்த நீரை பயன்படுத்திக் கொள்கின்றது. தான் வாழுகிற சூழ்நிலையால் அப்படிச் செய்கின்றது. வேறு எந்தக் கெடுதலும் செய்யிறேல்ல. அதனாலதான் மருந்தாகவும் இருக்குது. ஆனால் இது நாகதாளி. வளமான எல்லாவற்றையும் தனக்கும், தன் குடும்பத்துக்கும் மட்டுமே எடுத்துக்கொள்ளும். தன்னை அண்டி எதனையும் வாழ விடாது."

தனது முதிர்ந்த அறிவினை மிக இலகுவாக வெளிப்படுத்துகின்றார்.

நாகதாளிக்கும் கள்ளிச் செய்திக்கும் பேதம் தெரியாத, எனது படிப்பறிவை நினைந்து வெட்கப்படுகின்றேன்.

இதில் நாகதாளி யார்? கள்ளிச்செடி யார்?

முருங்கை மரத்தில் மீண்டும் ஏறும் முயற்சியில், வேதாளம் கேட்ட கேள்வி. யாருக்கும் பதில் தெரியும்?

•

---

# இருள்



*வானம் காரிருளால் மூழ்கிக்கிடந்தது*
*மனிதமும் மனிதரும் உறங்கியிருந்த நேரமது*
*வானத்தில் சூரியனைக்காணவில்லை*
*என்பது போல எண்ணிக்கொண்டிருந்தான்*
*ஒருவன்*

*அவன் கண்களில் ஆயிரம் முப்பரிமாணங்கள்*
*மனதில் பல்லாயிரங்கணக்கான சஞ்சலங்கள்*
*பாயைபோட்டவனின் மனதில்*
*உறக்கத்தை காணவில்லை*

*அவனது எண்ணங்கள் கண்டங்கள்*
*தாண்டி ஓடித்திருந்தது*
*மழலைகளை பார்க்க அவனுக்கு*
*ஆசை சிலசமயம் மழலையாக மாறவும்*

*ஆடிப்போன அவனது*
*வாழ்வில் ஓர் ஆணிவேராய்*
*இருப்பது ஓர் உறவு*
*நித்திரை தொலைத்த*
*நாட்கள் வருடங்கள் ஆகின*

*மீண்டும் அவன் எண்ணங்கள்*
*மலையிலிந்து வீழும்*
*அருவியாய் வீழத்தொடங்கியது*

ஜெ. நிவா

# விழுகையும் எழுகையும்

நா. நவராஜ்

என்னிடம் ஒருமாணவன் வந்தான். அவனுக்கு படிக்கவேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. எனினும் எழுத்தை வடிவாகவும் பிழையில்லாமலும் எழுதுவது அவனுக்கு சிரமமாக இருந்ததால் அவனுக்கு எதிர்காலம் பற்றிய பயம் இருந்தது. அதனால் சிறிது தன்னம்பிக்கை குறைந்திருந்தாலும் அவன் தளரவில்லை முயற்சித்தான். க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை நடந்தது. முடிவுகள் வெளியாகின. உயர்தரம் செல்வதற்குப் பெறுபேறுகள் அவனுக்குப் போதவில்லை கவலைப்பட்டான். சோர்வுற்றான். இரண்டாம் முறை எடுக்கத் தூண்டினேன் முயற்சித்தான். இரண்டாம் அமர்வில் உயர்தரம் செல்வதற்குரிய பெறுபேற்றினைப் பெற்று சந்தோஷமாக உயர்தரத்தில் கற்கத் தொடங்கினான். நாட்டுப்பிரச்சினை, இடப்பெயர்வு போன்றவற்றால் அவனைத் தொடர்ச்சியாகச் சந்திக்க முடியவில்லை. க.பொ.த. உயர்தரப் பரீட்சைமுடிவுகள் வந்ததன். பின்னர் ஒருநாள் தமிழ்ப்பிரிவில் மிகுந்த முயற்சியெடுத்துப் பல்கலைகழகம் போவேன் என்ற நம்பிக்கையில் கற்றுவந்ததாகவும் பரீட்சைமுடிவு ACS என வந்தமையால் அது கனவாகிவிட்டதாகவும் கூறினான். இரண்டாம் அமர்வை எதிர்கொண்டால் என்ன எனக்கேட்டேன். தான் வெளிநாட்டுக்குப் போவதற்கு அலுவல் பார்ப்பதாகவும் அதனால் திரும்ப எடுப்பது முடியாத காரியம் எனவும் குறிப்பிட்டான். தொடர்ந்து இரண்டு, மூன்று நாட்கள் பல எடுத்துக்காட்டுகளைக் காட்டிக் கதைத்தேன். ஓரளவு வெற்றியும் பெற்றேன். வெளிநாடு போவது என்ற இலக்கை வைத்துக்கொண்டு அங்கு போவதற்கு ஆறு மாதங்கள் காத்திருக்கவேண்டும் என்ற கால அவகாசத்தையும் கையில் எடுத்து இங்கு நிற்கும் வேளையில் படித்து பரீட்சைக்குத் தோற்றுவது என்றும் முடிவெடுத்தோம்.அக்காலப் பகுதியில் க.பொ.த. உயர்தரப் பரீட்சை சித்திரை மாதத்தில் நடத்துவதாக முடிவெடுக்கப்பட்டமையும் அவனுக்கு ஒரு வாய்ப்பாக இருந்தது. படித்தான் பரீட்சை எடுத்தான். முடிவுகள் வந்தநேரம் தேடி வந்தான். நான் 'பாசாகிவிட்டேன் 3 A என்றான். சொல்லும் போது அவன் முகத்தில் இருந்த மகிழ்ச்சி... அவன் இப்போது பல்கலைக்கழகம் ஒன்றில் விரிவுரையாளராக இருக்கின்றான்.

இது கற்பனை அல்ல. நடந்தது. அந்தப் பையன் மட்டும் தோல்வியைக் கண்டு துவண்டு அதன் மடியில் நிரந்தரமாகப் படுத்திருந்தால். அதற்குள் மூழ்கியிருந்தால் வெற்றிக் கனியைப் பறித்திருக்க முடியாது. தெருவில் அல்லது வெளியில் நின்றிருப்பான். இப்படியான சந்தர்ப்பங்கள் எங்கள் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் ஏற்படுகின்றன. அதற்கான சரியான வழிகாட்டல் கிடைகின்றபோது சிலர் அவற்றில் இருந்து விடுபட்டு மீண்டும் எழுகின்றனர். பலர் அதற்குள் மூழ்கி வாழ்வின் பாதை மாறிச் செல்கின்றனர். தாங்கள் நினைத்ததை அடையமுடியாமல் 'இந்தப்பழம் புளிக்கும்' என்ற நரியின் கதையைப்போல் ஏதோ ஒரு சாட்டைச் சொல்லி வேறு வழி போய்க் கிடைத்ததிலும் திருப்தியில்லாமல் வாழ்ந்து முடிக்கின்றனர். சிலர் இடையில் தம் வாழ்வை முடிக்கின்றனர்.




பிரச்சினை, தோல்வி போன்றன ஏற்படும் போது நமக்கு என்ன நிகழ்கின்றது? அதில் இருந்து விடுபட்டு மீண்டும் எழுந்து நாம் நினைத்ததைச் சாதிப்பது எப்படி? என்று இக்கட்டுரையில் மிகச் சுருக்கமாக நோக்குவோம்.

குறிப்பிட்ட இலக்கை முன் வைத்து நாமெல்லோரும் வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருக்கின்றோம். (சிலர் குறிக்கோளே இல்லாமல் வாழ்கின்றனர். அவர்கள் விதிவிலக்குகள்) நம்மால் முன்வைக்கப்பட்டுள்ள இலக்கை அடைவதற்கு முயற்சியும் செய்கின்றோம். இம் முயற்சியின் போது நாம் பலவேளைகளிலோ அல்லது சிலவேளைகளிலோ சாண் ஏற முழம் சறுக்கிய நிலையாகத் தோல்வியைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. வெற்றியின் போது தொடர்ந்தும் உற்சாகமாகத் தொழிற்படுவதற்குரிய மனவலுவைப் பெறும் நாம். தோல்வியின் போது உற்சாகம் இழந்து உளவலுக் குறைந்து ஆட்டங்காண சோர்ந்து போகின்றோம். இலக்குக் கேள்விக் குறியாகின்றது. ஏன்? மனிதர்களின் ஆளுமைக் கூறில் Optimistic (நேரானபார்வை) Pessimistic (எதிரானபார்வை) என்ற இரு அம்சங்களை உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். Optimistic என்னும் போது ஒரு செயலில் அல்லது எடுத்துக்கொண்ட இலக்கில் நான் வெற்றி பெறுவேன் எனத் திடமாக நம்பிச் செயற்படுவது. அதாவது வேப்பம் புவிலும் தேன் துளி இருக்கின்றது என்ற பார்வை. இத்தகையவர்கள் தோல்வியால் துவள்வதில்லை, அதை ஒரு பொருட்டாகக் கருதுவதில்லை. யாவற்றையும் தமக்குச் சாதகமாகப் பார்த்து அதீத நம்பிக்கையோடு செயற்படுவார்கள். Pessimistic ஐப் பொறுத்தமட்டில் இவர்கள் எதையுமே எதிராகவே பார்ப்பார்கள். ஒரு செயலில் திடமான நம்பிக்கை இவர்களுக்கு இருக்காது. ஒரு செயலில் இறங்கினால் மிகுந்த பதட்டத்துடன் நடக்கும் இவர்கள் அதில் ஒரு தடையைச் சந்திக்க நேரின் பாதாளத்திலே வீழ்ந்து விடுவார்கள். மீண்டும் அச்செயலில் இவர்கள் ஈடுபடுவதென்பது முயல்கொம்புதான்.

இவ்விரண்டு நிலைகளும் இரண்டு முனைகள் அந்தலைகள் எனில் நம்மில் பலபேர் இரண்டும் கலந்த இடைநிலையில் நிற்கின்றோம். அதனால் தான் வெற்றியின் போது நம்பிக்கையையும், தோல்வியின் போது நம்பிக்கையீனத்தையும் அனுபவிக்கின்றோம். எனினும் மேற்குறிப்பிட்ட இருவகைத் தன்மையின் உச்சநிலைகளை வெற்றியின்போதோ, தோல்வியின் போதோ நாம் அடைவதில்லை. அதனால் தான் எமக்குள் இருக்கும் உளசக்தியினாலும், சிலவேளைகளில் மற்றவர்களின் வழிகாட்டலாலும் நாம் தோல்வியின் போது

மீள எழுந்து எமது இலக்கையோ, செயலையோ தொடர முடிகின்றது. Pessimistic என்ற தன்மை சற்றுக் கூட உள்ளவர்கள் தமக்கு ஏற்பட்ட தடையை, இன்னொருவரோடு பகிர்ந்து மீள எழுவதற்கு முயலுவது நல்லது. அப்படியில்லை எனில் அவர்கள் அதனைத் தமக்குள் வைத்துக் குமைந்து தமது சிந்தனைகளை எதிரானதாக்கி (Nagative) எதிரான உணர்வுகளுக்கு அடிமைப்பட்டு பின்னடைவைச் சந்திக்கின்ற நிலை ஏற்படுகின்றது. இந்நிலை ஒருவரை மனச்சோர்வு நிலைக்குள்ளும் தள்ளவாய்ப்புண்டு.

எனவே எமக்கு ஏற்படுகின்ற தோல்விகளில், பிரச்சினைகளில் இருந்து எம்மை மீளக் கட்டி எழுப்ப நாம் முயலவேண்டும். நாம் ஒன்றை எப்படிப் பார்க்கின்றோம் என்பது தான் எமது உற்சாகத்தை ஊக்கத்தை வரையறுக்கின்றது. தோல்வி என்பதை ஒருவர் தனது வெற்றியின் படிக்கல்லாகவும் தனது சமாதியின் ஒரு கல்லாகவும் பார்க்கலாம். படிக்கல்லாய்ப் பார்ப்பவர் தொடர்ந்து தொழிற்படுவார். சமாதிக்கல்லாய்ப் பார்ப்பவர் சோர்வடைவார். எமது உளசக்திக்கு, தாங்கு திறனுக்கு உட்பட்ட பிரச்சினையை, தோல்வியை தனித்து எம் அகத்தில் வைத்தே கையாளலாம். அதை எதிர்கொள்ளலாம். தாங்கு திறனுக்கு அப்பாற்பட்டதை வெட்கப்படாமல் நம்பிக்கைக்கு உரியவரோடு பகிர்ந்து அதனைத் தீர்க்க, கையாள முயற்சிக்கவேண்டும்.

தண்ணீர் எமக்கு இடுப்பளவு இருக்கும் போது நாம் மட்டும் நின்று நீந்தப் பழகலாம். தலைக்குமேல் என்றால் நிச்சயமாக இன்னொருவரின் அல்லது இன்னொரு பொருளின் உதவி தேவையல்லவா?




ஸ்ரீதுவாரக

பூக்கன்றுகளையும் பழக்கன்றுகளையும் நிழல் மரங்கள்
அனைத்துவித மரக்கன்றுகளையும் குறைந்தவிலையில்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.



SSYSTEMS Anyplace Anywhere Anytime

SS SYSTEMS

Creativity never end…

* Web Design & Development
* Point of Sale (POS)
* Computer Sale & Service
* CCTV & Alarm System
* Networking & Intercom
* Door Lock & Fingerprint
* IT Product sale &Service

info@ss-system.com www.ss-sys.com

077 79 45678
021 56 16109

No .66, K.K.S Road, Kokuvil , Jaffna.




Animax
Digital Printing
021 222 8980
077 767 9824
Thavady Junction, K.K.S Road, Kondavil.
animaxdigitall@gmail.com


New look
Weding Suits & Curtain Works
Specialist In Wedding Suits
Expert Ladies & Gents Tailors
077 90 37 472
076 844 58 73
Adiyapatham Road , Thirunelvely , Jaffna .



28.2.2021 மறுமலர்ச்சி மன்றத்தில் இடம்பெற்ற நடனத் திருவிழ

மெய்ப்பொருள் காண்பது அறிவு

# புத்தகப் பண்பாட்டு பேரவை




puththaka.p.v @gmail.com

இல . 68 நீதிமன்ற வீதி , மல்லாகம் .

076 393 4659

077 669 8386



இச்சஞ்சிகை மறுமலர்ச்சி மன்றம் நம்பிக்கைக்காக செருக்கற்புலம், சுழிபுரம் எனும் முகவரியில் வசிக்கும் அழ. பகீரதன் அவர்களால் பெப்ரவரி 2021 இல் சில்லாலை வீதி, பண்டத்தரிப்பிலுள்ள ஜே. எஸ். பிறின்டேஸ் இல் அச்சிடப்பட்டு வெளியி